Government of India
Ministry of Commerce and Industry
Department of Commerce

Council for Leather Exports
*Sponsored by Ministry of Commerce & Industry, Government of India*

Azadi Ka Amrit Mahotsav




## இந்தியா (India) - ஐக்கிய அரபு அமீரகம் (UAE)

## விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தம் (CEPA)




## இந்தியா – ஆஸ்திரேலியா

## பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தம் (ECTA)

# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

இந்தியாவும் ஐக்கிய அரபு அமீரகமும் இரண்டு நாடுகளிடையே பொருட்கள் மற்றும் சேவைகளில் வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கு 18 பிப்ரவரி 2022 அன்று விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தத்தில் (CEPA) கையெழுத்திட்டுள்ளன. இந்த ஒப்பந்தம் 2022 மே 1-ம் தேதி முதல் அதிகாரப்பூர்வமாக செயல்பாட்டிற்கு வந்தது. இந்த CEPA அமலாக்கத்திற்கு வந்ததைத் தொடர்ந்து ஆபரண தயாரிப்புகளை உள்ளடக்கிய சரக்குகளின் முதல் அனுப்பீடு 2022 மே 1-ம் தேதியன்று புதுடெல்லியிலிருந்து ஐக்கிய அரபு அமீரகத்திற்கு (UAE) அனுப்பி வைக்கப்பட்டது.

மேலும், இந்தியாவும் மற்றும் ஆஸ்திரேலியாவும் கூட இரண்டு நாடுகளுக்கிடையே இருதரப்பு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்காக / ஊக்குவிப்பதற்காக 2 ஏப்ரல் 2022 அன்று பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தத்தில் (Ind Aus ECTA) கையெழுத்திட்டுள்ளன. இரு தரப்பினரும் ஒருவருக்கொருவர் அறிவித்து 30 நாட்களுக்குப் பிறகு இந்த ECTA நடைமுறைக்கு வரும், உள் சட்ட நடைமுறைகள் உட்பட தேவையான உள்நாட்டு தேவைகளை நிறைவு செய்ததாக சான்றளிக்கும்.

இந்தியா - ஐக்கிய அரபு அமீரக CEPA ஆனது 5 ஆண்டுகளில் இருதரப்பு சரக்கு வர்த்தகத்தை 60 பில்லியன் அமெரிக்க டாலரிலிருந்து 100 பில்லியன் அமெரிக்க டாலருக்கு அதிகரிக்கச் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதே நிலையில், இந்தியா - ஆஸ்திரேலியா ECTA ஆனது அடுத்த 5 ஆண்டுகளில் இருதரப்பு சரக்கு வர்த்தகத்தை 27.5 பில்லியன் அமெரிக்க டாலரிலிருந்து ஏறக்குறைய 45 பில்லியன் அமெரிக்க டாலரிலிருந்து 50 பில்லியன் மெரிக்க டாலருக்கு அதிகரிக்கச் செய்யும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய இரு நாடுகளுடனான இந்தியாவின் மேற்கண்ட வர்த்தக ஒப்பந்தங்களானது அடுத்த ஐந்தாண்டுகளில் இந்தியாவில் 20 இலட்ச வேலைகள் உருவாக்கும். வாழ்க்கைத் தரங்களை உயர்த்தும் மற்றும் இந்திய மக்களின் ஒட்டுமொத்த நலனை அதிகரிக்கச் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சுதந்திரமான வர்த்தக ஒப்பந்தங்களை சாதகமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டியதை முன்னிட்டு, ஏற்றுமதியாளர்களிடையே போதிய விழிப்புணர்வை உருவாக்கிக்கொள்ள வேண்டியது முக்கியமாகும். இந்தப் பின்னணியில் இந்திய அரசின் வர்த்தகத் துறையானது, நாட்டின் 8 நகரங்களில் சென்றடைவு நிகழ்ச்சிகளை / திட்டங்களை நடத்துவதற்கு முடிவு செய்துள்ளது. இந்த வர்த்தக ஒப்பந்தங்களின் விஷயங்கள் குறித்து தொழில் பங்குதாரர்களிடையே விழிப்புணர்வு எற்படுவதற்கு வர்த்தகத் துறையானது, இந்தியா – ஐக்கிய அரவு அமீரகம் CEPA மற்றும் இந்தியா – ஆஸ்திரேலியா ECTA குறித்து FAQ – களை பிரிசுரித்து வெளியிட்டுள்ளது.

இந்தியா-ஐக்கிய அரபு அமீரகத்திற்கான இணைப்பு:

https://commerce.gov.in/international-trade/trade- agreements/comprehensive-economic-partnership-agreement-between-the-government-of-the-republic-of-india-and-the-government-of-the-united-arab-emirates-uae/https://www.moec.gov.ae/en/cepa_india.

இந்தியா - ஆஸ்திரேலியா ECTA-விற்கான இணைப்பு:

https://www.dfat.gov.au/trade/agreements/negotiations/aifta/australia-india-ecta-official-text



# இந்தியா – ஐக்கிய அரபு அமீரகம் (UAE) விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தம் (CEPA)

## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

**வினா 1: ஆத்மநிர்பார் பாரத் vs சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் (FTAs) என் பொதுக் கொள்கைகள்**

விடை: இரண்டு பொதுக்கொள்கைகளும், கருத்துக்களும் முரணானவை அல்ல, மாறாக ஒன்றுக்கொன்று பூர்த்தி செய்யக்கூடியவை, பாராட்டுக்குரியவை. ஆத்மநிர்பார் என்றால், தன்னடக்கத்தையோ, உலகத்திலிருந்து தனிமைப்படுத்தப்படுவதையோ அல்லது பாதுகாப்பாளராக இருப்பதையோ அர்த்தப் படுத்துவதில்லை. மாறாக இது, இறுதிப்பொருட்களின் உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்துவதற்கு, உலக மதிப்புசங்கிலியுடன் சிறப்பாக ஒருங்கிணைவதன் மூலம் ஆதாயம் அடைவதற்கு மற்றும் நியாயமான வர்த்தகத்தை உறுதி செய்வதற்கு நாம் ஒன்றுசேர்ந்து செயல்படுவது பற்றி குறிப்பிடுவது ஆகும். இந்த ஒப்பந்தம், நம் உற்பத்தியை மேம்படுத்துவதற்கு தேவையான உத்வேகத்தை தரக்கூடிய முதலீட்டை அதிகரிக்கச் செய்யும். உலக பொருளாதாரத்தில் இந்தியாவை ஒரு பெரிய மற்றும் மிகவும் முக்கியமான பகுதியாக செய்வது? திறமையான, போட்டி மற்றும் மீள்திறனுடைய கொள்கைகளை பின்பற்றுவது மற்றும் தன்னிறைவு மற்றும் சுய உருவாக்கும் திறன் கொண்ட கொள்கைகளை பின்பற்றுவது ஆத்மநிர்பார் பாரத் அபியானின் நோக்கமாகும்.

ஆத்ம நிர்பார் பாரத் அபியான் ஒரு அளவீடு செய்யப்பட்ட மற்றும் சமநிலையான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்துடன் சேர்த்து உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்துவது மீது மட்டுமல்லாமல் நாட்டை உலக மதிப்பு சங்கிலியின் ஒரு அங்கமாகவும் செய்வதில் கவனம் செலுத்தக்கூடிய ஒரு சுயசார்பு இந்தியாவை உருவாக்கும்.

**வினா 2: எப்படி ஒரு விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தம் (CEPA), FTA-விலிருந்து வேறுபட்டதாகும்?**

பதில்: பகுதிகளின் பரந்த கவரேஜ் மற்றும் அர்ப்பணிப்பு வகைகளில் கூட்டாண்மை அடிப்படையில், பெயர் சொல்வதுபோல, CEPA என்பது FTA-வை விட மிகவும் விரிவானது மற்றும் லட்சியமானது. ஒரு மரபுசார்ந்த FTA முக்கியமாக பொருட்கள் / சரக்குகள் மீது கவனம் செலுத்திவரும் நிலையில் சேவைகள், முதலீடு, IPR, அரசு கொள்முதல், தகராறுகள் முதலியன போன்ற பல பகுதிகளின் முழுமையான கவரேஜ் வகையில் ஒரு CEPA மிகவும் லட்சியமானது. இரண்டாவதாக, FTA-வை விட CEPA-வானது, வர்த்தகத்தின் ஒழுங்கற்ற அம்சங்களை சூழ்ந்து கவனிக்கிறது. இந்த காரணத்திற்காகவே கூட்டாளிகளின் ஒழுங்குமுறை ..........திட்டங்களை உள்ளடக்கியிருக்கிற பரஸ்பர அங்கீகார ஒப்பந்தங்களை உள்ளடக்கியிருக்கிறது. கூட்டாளிகள் ஒரே முனை நோக்கங்களை அவர்கள் எய்துவார்கள் என்ற யூகத்தின் அடிப்படையில் கூட்டாளிகளின் வேறுபட்ட ஒழுங்குமுறை ...........திட்டங்களை ஒரு MRA அங்கீகரிக்கிறது.

**வினா 3: இந்தியா – ஐக்கிய அரபு அமீரக ஒப்பந்தத்தின் (CEPA) நன்மைகள் என்ன?**

விடை: ஐக்கிய அரபு அமீரகம் (UAE) தற்போது இந்தியாவின் மூன்றாவது மிகப்பெரிய வர்த்தக கூட்டாளி ஆகும். 2019-20ல் இருதரப்பு வர்த்தகத்தின் மதிப்பு 59 பில்லியன் அமெரிக்க டாலர் ஆகும். ஐக்கிய அரபு அமீரகம், இந்தியாவின் இரண்டாவது டாலர் ஆகும். ஐக்கிய அரபு அமீரகம், இந்தியாவின் இரண்டாவது மிகப்பெரிய ஏற்றுமதி இலக்கு நாடாகும், 2019-20 ஆண்டிற்கு ஏற்றுமதி மதிப்பு ஏறக்குறைய 29 பில்லியன் அமெரிக்க டாலர் ஆகும். இது மட்டுமல்ல, ஐக்கிய அரபு அமீரகம் இந்தியாவில் எட்டாவது மிகப்பெரிய முதலீட்டாளர் ஆகும். இதன் மதிப்பிடப்பட்ட முதலீடு 18 பில்லியன் அமெரிக்க டாலர் ஆகும். ஐக்கிய அரபு அமீரகத்தில் இந்தியாவின் முதலீடு தன் ஏறக்குறைய 85 பில்லியன் அமெரிக்க டாலர் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட ஐந்தாண்டுகளுக்குள் சரக்குகளில் இருதரப்பு வர்த்தகத்தை 100 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கும் மற்றும் சேவைகளில் வர்த்தகத்தை 15 பில்லியன் அமெரிக்க டாலருக்கும் CEPA அதிகரிக்கச் செய்யும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய அரபு அமீரகத்தால் 5% இறக்குமதி வரிக்கு உட்படுத்தப்பட்ட ஏறக்குறைய 26 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புடைய இந்திய பொருட்களால் இந்தியா - UAE CEPA நன்மையடைய உள்ளது. இந்தியாவிலிருந்து 99% இறக்குமதிக்கு ஒத்திசைவாக ஒட்டுமொத்த ஐக்கிய அரபு அமீரகம் அதன் 97% கட்டண வரிகளில் வரிகளை நீக்க முன்வருகிறது. CEPA நடைமுறைக்கு வந்தவுடன் மதிப்பு வகையில் ஐக்கிய அரபு அமீரகத்திற்கு நம் மொத்த ஏற்றுமதியில் 90% வரி இல்லாததாகும். இந்தியாவிற்கு வழங்கப்படும் ஐக்கிய அரபு அமீரகத்தின் உடனடி பூஜ்ய வரி – சந்தை அணுகல் வழங்கலில் ரத்தினங்கள் மற்றும் நகைகள், ஜவுளி, தோல், காலணி, விளையாட்டுப்பொருட்கள், பிளாஸ்டிக்ஸ், அறைகலன், வேளாண் மற்றும் மரப்பொருட்கள், பொறியியல் பொருட்கள், மருந்துகள், மருத்துவ சாதனங்கள் / கருவிகள் மற்றும் மோட்டார் வாகனங்கள் போன்ற அனைத்து தொழிலாளர் தீவிர துறைகளும் உள்ளடங்கும். ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பா போன்ற பிற கண்டங்களில் மேலும் மதிப்பு கூட்டப்பட்ட ஏற்றுமதிகளுக்கு ஐக்கிய அரபு அமீரகம், இந்தியாவின் மூலதனப்பொருட்கள் மற்றும் இடைப்பட்ட பொருட்களைப் பெறுவதற்கான மையமாகவும் மாறலாம்.

எந்த வர்த்தக ஒப்பந்தத்திலும் இல்லாத வகையில் முதல்முறையாக, இந்திய மருந்தாக்க பொருட்களுக்கு அணுகல் வசதி செய்வதற்கு குறிப்பாக வளர்ந்த நாட்டு ஒழுங்குமுறைப்படுத்துபவர்களால் அதாவது யுனைடெட் ஸ்டேட்ஸ் (USFDA), யுனைடெட் கிங்டம் (UKMHRA), ஐரோப்பிய ஒன்றியம் (EMA) மற்றும் ஜப்பான் (PMDA) ஆகியவற்றால் ஏற்பளிக்கப்படும் பொருட்களுக்கு 90 நாட்களில் ஆட்டோமேட்டிக் பதிவு மற்றும் மார்க்கெட்டிங் அங்கீகரிப்பு பெறுவதற்கு பார்மசூட்டிக்கல்ஸ் குறித்து ஒரு தனிப்பட்ட பின்னடைவு சேர்க்கப்பட்டுள்ளது.

**வினா 4: விற்பனைப்பொருள் / சரக்கு வர்த்தகத்தில் இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஒன்றுக்கு மற்றொன்று வழங்கும் கட்டணச் (தீர்வை, தரப்புவரி) சலுகைகள் என்ன?**

விடை: விற்பனைப்பொருட்களில் / சரக்குகளில் வர்த்தகம் என்பதில் 8-இலக்க ஹார்மோனைஸ்ட் சிஸ்டம் (HS) குறியீட்டில் தீர்வை / காப்புவரி பரிமாற்றம் உள்ளடங்கும் மற்றும் இது உடனடி நீக்கம், படிப்படியாக நீக்குதல், ஒதுக்கீடு கோட்டாவுடன் படிப்படியாக நீக்குதல் மற்றும் விதிவிலக்கு பட்டியல் என நான்கு பட்டியலாக வகை பிரிக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தத்தின் கீழ் ஐக்கிய அரபு அமீரகம் தீர்வைகள் வரிசையில் (மொத்த தீர்வைகள் - 7581) 97% நீக்கச் செய்யும். இது மதிப்பு வகையில் ஐக்கிய அரபு அமீரகத்திற்கு இந்திய ஏற்றுமதியில் 99% ஆகும், இதில் 80.3% வரிசைகளில் உடனடி தீர்வை நீக்கம் உள்ளடங்கும். மேலும் 1089 புராடக்ட்கள் (14.4% தீர்வைகள் வரிசைகள்) மற்றும் 180 புராடக்ட்கள் (2.4% தீர்வை வரிசைகள்) படிப்படியான முறையில் நீக்கம் செய்யப்படும், CEPA நடைமுறைக்கு வந்த தேதியிலிருந்து ஐக்கிய அரபு அமீரகத்தால் முறையே 5 ஆண்டு மற்றும் 10 ஆண்டு என படிப்படியான முறையில் அடிப்படை சுங்கவரி பூஜ்யத்திற்கு கொண்டுவரப்படும். மேலும் 35 பொருட்கள் (0.5%) படிப்படையான குறைப்பு பட்டியலில் உள்ளன. இங்கு ஐக்கிய அரபு அமீரகம் இந்தியாவிற்கு 50% வரை தீர்வை வரி குறைப்பை தருகிறது. ஐக்கிய அரபு அமீரகம் 187 புராட்கட்களை மட்டுமே விலக்கு பட்டியலில் வைத்திருக்கிறது. இதுமொத்த வரிசைகளில் 2.4% ஆகும்.

சரிநிகர் எண்ணிக்கையில் புராடக்ட்கள் உள்ளடங்கிய இந்தியாவின் 11908 தீர்வை வரிசைகள் உள்ளன. உடனடி நீக்கப் பட்டியலில் 7694 புராடக்ட்கள் (64.61%) அடையாளம் காணப்பட்டுள்ளன. CEPA நடைமுறைக்கு வரும் பட்சத்தில் ஐக்கிய அரபு அமீரகத்திலிருந்து செய்யப்படும் இறக்குமதிகள் உடனடியாக வரி இல்லாததாகும். 2176 புராடக்ட்கள் (18.27%) மற்றும் 225 புராடக்ட்கள் (1.89%) படிப்படியான முறையில் நீக்கப்பட்டியலில் உள்ளன. CEPA நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து முறையே 5/7 ஆண்டு மற்றும் 10 ஆண்டுகளில் படிப்படியான முறையில் அடிப்படை சுங்கவரி பூஜ்யத்திற்கு கொண்டுவரப்படும். 656 புராடக்ட்கள் (5.5%) படிப்படியான குறைப்பு பட்டியலில் உள்ளன. இங்கு தீர்வை வரி ஒதுக்கீடு (TRQ) சேர்ந்தோ அல்லது இல்லாமலோ ஐக்கிய அரபு அமீரகத்திற்கு 50% தீர்வை குறைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு உணர்திறன்களை கருத்தில் கொண்டு, எஞ்சிய 1157 புராடக்ட்கள் (9.72%) விலக்கு பட்டியலில் வைக்கப்பட்டுள்ளன.

**வினா 5: இந்தியா UAE CEPA-வின் விலக்குப்பட்டியலில் உள்ள முக்கிய வகை புராடக்ட்கள் என்ன?**

விடை: உள்நாட்டு உணர்திறன்களை கருத்தில்கொண்டு, 1157 புராடக்ட்கள் (9.72%) விலக்குப்பட்டியலில் வைக்கப்பட்டுள்ளன.

பின்வரும் வகைப்பிரிவுகளில் உள்ள ஒரு பெருமளவிலான புராடக்ட்கள் விலக்குப்பட்டியலில் வைக்கப்பட்டுள்ளன.

i. நகைகள் (தங்கநகைகளுக்கு 2.5 டன்கள் ஒதுக்கீடு தவிர)
ii. பால்பொருட்கள்
iii. பழங்கள், காய்கறிகள் மற்றும் பருப்பு கொட்டைகள் (பயிர்கள்)
iv. தானியங்கள்
v. தேயிலை, காபிக்கொட்டை, வாசனைத்திரவியங்கள்
vi. சர்க்கரை
vii. உணவுத்தயாரிப்புகள் (இன்ஸ்டன்ட் காபி / டீ, சர்பத், வெற்றிலைப்பாக்கு, பான்மசாலா, சர்க்கரை சிரப் முதலானவை.
viii. புகையிலைப் புராடக்ட்கள்
ix. பெட்ரோலியம் மெழுகுகள்
x. சாயங்கள் மற்றும் நிறமிகள்
xi. சோப்புகள் மற்றும் அழகு சாதனப்பொருட்கள்
xii. இயற்கை ரப்பர், டயர்கள் மற்றும் இதர ரப்பர் பொருட்கள்
xiii. காலணி
xiv. பதப்படுத்தப்பட்ட பளிங்கு கற்கள் (புராசஸ்ட் மார்பில்)
xv. பொம்மைகள்
xvi. பிளாஸ்டிக்
xvii. அலுமினியம் மற்றும் செம்பு ஸ்கிராப்புகள்
xviii. பெரும்பாலான வாகனங்கள் மற்றும் வாகன பாகங்கள்
xix. மருத்துவ சாதனங்கள்
xx. தொலைக்காட்சிப்பெட்டிகள் & பிக்சர் டியூப்கள்

**வினா 6: ஒப்பந்தத்தின்படி இந்தியாவிற்கான ஏற்றுமதி வாய்ப்புகள் என்ன?**

விடை: ஐக்கிய அரபு அமீரகம் அனைத்து ஆப்ரிக்கா, பல பிற வளைகுடா நாடுகள் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஒரு நுழைவாயிலாகும். இதற்கு ஏராளமான இந்திய புலம்பெயர்ந்தோர் உள்ளனர் மற்றும் ஜவுளி, ரத்தினங்கள் மற்றும் நகைகள், தோல், காலணி மற்றும் உணவுப்பொருட்களுக்கு ஒரு பெரிய சந்தை உள்ளது. இவை தொழிலாளரின் உடலுழைப்பு சார்ந்தவை மற்றும் பொருளாதார வாய்ப்புகளை வழங்குகின்றன. இந்தியாவின் ஏற்றுமதி நலன் உள்ள பல புராடக்ட்கள் மீது UAE உடனடி தீர்வை தாராளமயம் மேற்கொண்டுள்ளது. CEPA நடைமுறைப்படுத்த தொடங்கியவுடன் மதிப்பு வகையில் 90% இந்திய ஏற்றுமதிகள் வரி இல்லாததாகும். தொழிலாளர் உடலுழைப்பு சார்ந்த ரத்தினங்கள் மற்றும் நகைகள் ஜவுளி, தோல் காலணிகள், விளையாட்டுப்பொருட்கள், பிளாஸ்டிக், அறைகலன், வேளாண்பொருட்கள், பார்மசூட்டிகள், மருத்துவ சாதனங்கள் மற்றும் ஆட்டோமொபைல்ஸ் போன்றவை ஐக்கிய அரபு அமீரகச் சந்தையில் ஆயத்தீர்வை இல்லா சந்தைக்கு அணுகல் பெற உள்ளன. ஒட்டுமொத்தத்தில், மதிப்பு வகையில் ஐக்கிய அரபு அமீரகத்திற்கு இந்திய ஏற்றுமதியில் 99% ஆக இருக்கும் அதன் தீர்வை வரிசையில் 97%-க்கு மேல் தீர்வை வரியை UAE நீக்குகிறது. இவை இந்தியாவிற்கு நன்மை பயக்கும் சாத்தியமுள்ள பகுதிகளாகும்.

## தோற்ற விதிகள்

**வினா 7: ஒப்பந்தத்தின்கீழ் "தோற்றுவிக்கப்படும் புராடக்ட்கள்" என்பதன் பொருள் வரையறை என்ன?**

விடை: எந்த பொருட்கள் தரப்பு நாட்டில் முற்றிலும் பெறப்படுகிறதோ அல்லது முற்றிலும் உற்பத்தி செய்யப்படுகிறதோ அந்த பொருட்கள் தோற்றுவிக்கப்படும் பொருட்கள் ஆகும் அல்லது அந்தப்பொருள் முற்றிலும் உற்பத்தி செய்யப்படாமல் அல்லது நாட்டில் பகுதி உற்பத்தி செய்யப்படுமானால் அது கடுமையான நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டியிருக்கும்.

அவை பின்வருமாறு:

i. அந்தப் பொருள் 40 சதவீதத்திற்கு குறையாமல் தகுதி மதிப்பு உள்ளடக்கம் கொண்டிருத்தல் வேண்டும் மற்றும்

ii. உற்பத்திக்கு தோற்றுவிக்கப்படாத பொருட்களை பயன்படுத்தியிருக்கும் அனைத்து நான்கு அல்லது ஆறு இலக்க அளவில் தீர்வை வகைப்படுத்தலில் ஒரு மாற்றம் மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

ரத்தினங்கள் மற்றும் நகைகள் துறைக்கு மதிப்புக்கூட்டல் குறைவாக இருக்கும். ஏனெனில் மதிப்புக்கூட்டல் 3-7%-க்குள் என்பதே செயல்முறையாகும். இது ஐக்கிய அரபு அமீரகத்திற்கு நம் நகைகள் ஏற்றுமதியை ஊக்குவிக்கச் செய்யும்.

**கேள்வி 8: இந்தியா-ஐக்கிய அரபு அமீரகம் CEPA இன் கீழ் பயன்படுத்தும் நாட்டிலே தோற்றுவிக்கப்படாத தயாரிப்புகளுக்கான தோற்றுவாய் விதிகள் யாவை?**

பதில்: கணிசமான செயல்படுத்தலுக்கான தேவையை பிரதிபலிக்கும் கடுமையான தயாரிப்புச் சார்ந்த தோற்றுவாய் விதிகளை ஒப்பந்தம் கொண்டுள்ளது. மதிப்பு உள்ளடக்கம் கூட்டல் 40 சதவீதத்தை விட குறைவாக இல்லை என்றால், ஏற்றுமதியின் கலம் வரை விலை (FOB) மதிப்பை அடிப்படையாகவும் மற்றும் சரக்கின் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் அனைத்து 'பயன்படுத்தும் நாட்டிலே தோற்றுவிக்கப்படாத பொருட்களும்' தரப்பு நாட்டில் சுங்க வகைப்படுத்தலில் ஒத்திசைவான பொருள் விளக்க மற்றும் குறியீட்டு அமைப்பின் நான்கு அல்லது ஆறு இலக்க நிலையில் ஒரு மாற்றத்திற்கு (அதாவது, சுங்கவரித் தலைப்பில் அல்லது சுங்கவரித் துணைத்தலைப்பில் ஒரு மாற்றம்) உள்ளாகி இருப்பதாக எடுத்துக் கொண்டால், எந்தவொரு சரக்குகளும் இந்தியா-ஐக்கிய அரபு அமீரகம் CEPA இன் கீழ் சுங்கச்சலுகைக்குத் தகுதிபெற்று இருந்திருக்கும். மேலும், தோற்றுவாய் விதிகள் முடிவளவை மீறலைத் தடுக்க, ஐக்கிய அரபு அமீரகத்தின் பொருளாதார அமைச்சகத்தால் தோற்றுவாய்ச் சான்றிதழ் வழங்கப்படும்.

**கேள்வி 9: ஐக்கிய அரபு அமீரகம் (மூன்றாம் நாடு) அல்லாத வேறு ஒரு நாட்டில் இருந்து தயாரிப்புகள், ஐக்கிய அரபு அமீரகம் வழியாக இந்திய சந்தைக்குள் நுழைந்தால் இந்தியா-ஐக்கிய அரபு அமீரகம் CEPA இன் கீழ் சுங்கச் சலுகையில் இருந்து பலனடைய முடியுமா?**

பதில்: முடியாது. இந்தியா- ஐக்கிய அரபு அமீரகம் CEPA சரக்குகளில் வர்த்தகமானது, கணிசமான செயல்படுத்தலுக்கான தேவையைப் பிரதிபலிக்கும் கடுமையான தோற்றுவாய் விதிகளின் மூலம் அத்தகைய தயாரிப்புகளை அனுமதிக்காது. இந்தியாவின் வற்புறுத்தலின் அடிப்படையில், பல வேளாண் தயாரிப்புகள் முழுமையாகப் பெறப்பட்ட முடிவளவையைக் கொண்டுள்ளன. மேலும், மற்ற விதிகள் எங்கு பயன்படுத்தப்பட்டிருந்தாலும், இவை பெரும்பாலும் சுங்க வகைப்படுத்தலில் மாற்றம் மற்றும் குறைந்த பட்சம் 40% மதிப்பு கூட்டல் ஆகிய இரண்டையும் உள்ளடக்கியது. இது, ஏற்றுமதிகளின் கலம் வரை விலை (FOB) மதிப்பை அடிப்படையாக எடுத்துக் கொண்டுள்ளது. முதன்முறையாக, இந்திய எஃகுத் தொழில்துறையின் கோரிக்கையின் அடிப்படையில், எஃகு தயாரிப்புகளுக்குத் தயாரிப்புச் சார்ந்த விதிகள் என்ற முறையில் "உருக்கப்பட்டு ஊற்றப்பட்டது" என்ற நிபந்தனைக்கு ஐக்கிய அரபு அமீரகத்தை இந்தியா ஒப்புக்கொள்ளச் செய்தது. இதன் பொருள் என்னவென்றால், ஐக்கிய அரபு அமீரகத்தில் மூல எஃகு திரவ நிலையில் உருக்கப்பட வேண்டும், பின்னர் முதலாவது திட நிலைக்கு ஊற்றப்பட வேண்டும். மேலும், இந்திய இறக்குமதியாளரின் மீது ஆவணப்படுத்தலை மெய்ப்பிக்கும் பொறுப்பு ஒன்றை வைக்கின்ற இந்தியாவின் CAROTAR விதிகளையும், ஐக்கிய அரபு அமீரகத்தில்

தோற்றுவாய்ச் சான்றிதழை வழங்கும் ஆணையம் அவர்களின் பொருளாதார அமைச்சகமாக இருப்பதையும் கருத்தில் கொண்டால், கடுமையான விதிகளை மீறுவதற்கான வாய்ப்புகள் மிகக்குறைவாகவே உள்ளது, இது இத்தகைய விதிகளின் கீழ் கணிசமான செயல்படுத்தலையும், ஊர்தியிலிருந்து ஊர்திக்கு சரக்குகள் மாற்றப்படாமல் இருப்பதையும் உறுதிசெய்யும். மேலும், சரிபார்ப்பு இயங்கமைப்பு வலுவானது மற்றும் ஏற்றுமதியாளர் குறைந்தபட்ச தேவையான தகவலையும், சரியான ஆவணங்களையும் பராமரிக்க வேண்டும்.

இந்த ஒப்பந்தமானது, கணிசமான அளவு நிலைமாற்றப்படாமல் எந்தவொரு மூன்றாம் நாட்டுத் தயாரிப்பும் இந்தியச் சந்தையில் நுழையாமல் இருப்பதையும், சுங்கச் சலுகைகளில் இருந்து பலனடையாமல் இருப்பதையும் உறுதிசெய்வதற்கு உள்ளமைந்த பாதுகாப்புகளைக் கொண்டுள்ளது.

**கேள்வி 10: சிறப்பு நலக்காப்பு இயங்கமைப்புக்கு (SSMs) ஏதேனும் ஏற்பாடு உள்ளதா?**

பதில்: CEPA இன் திருப்புமுனை அம்சம் ஒரு நிரந்தர நலக்காப்பு இயங்கமைப்பு ஆகும், இது ஒப்பந்தத்தின் கீழ் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது மற்றும் இறக்குமதியில் எதிர்பாராத எழுச்சியின் சூழ்நிலையில் இதை பயன்படுத்த முடியும்.

**கேள்வி 11: ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து இறக்குமதிகளில் ஏற்படும் எழுச்சியில் இருந்து உள்நாட்டு உற்பத்தியாளர்களைப் பாதுகாக்க ஏதேனும் நலக்காப்பு இயங்கமைப்பு உள்ளதா?**

பதில்: ஆம், உள்நாட்டுத் தொழில்துறைக்கு கணிசமான அளவில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய அல்லது பாதிப்பை ஏற்படுத்தலாம் என அச்சுறுத்தக்கூடிய சுங்கச் சலுகைகள் காரணமாக இறக்குமதிகளில் ஏற்படும் ஏதாவது திடீர் எழுச்சிக்கு எதிராக உள்நாட்டுத் தயாரிப்பாளர்களைப் பாதுகாக்க நிரந்தர நலக்காப்பு இயங்கமைப்பு உள்ளது. நலக்காப்பு நடவடிக்கையாக, ஒரு தரப்பினர் சரக்கின் மீதான எந்தவொரு சுங்கக் கட்டணத்தையும் மேலும் குறைப்பதை இடைநிறுத்தி வைக்கலாம் அல்லது சுங்கக் கட்டணத்தை அதிகரிக்கலாம், இதில் நடவடிக்கை எடுக்கப்படும் நேரத்தில் சரக்கின் மீதான MFN பயனுறு இறக்குமதிக் கட்டணம் நடைமுறையில் இருக்க வேண்டும் அல்லது இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முந்தைய நாளில் சரக்கின் மீதான MFN பயனுறு இறக்குமதிக் கட்டணம் நடைமுறையில் இருக்க வேண்டும், இந்த இரண்டில் எது குறைவாக உள்ளதோ, அது நடைமுறைக்கு வரும்.

மேலும், ஐக்கிய அரபு அமீரகத்திற்கு நலம்பயக்கும் பாலிஎதிலீன், பாலிபுரோப்பிலீன் மற்றும் காப்பர் போன்ற பல ஏற்றுமதிப் பொருட்களுக்கு இந்தியா 50% வரை சுங்கக் குறைப்பு அல்லது சுங்கக் கட்டண ஒதுக்கீட்டில் (TRQ) பல கட்டங்களாக சுங்க நீக்கம் வடிவில் சுங்கச்சலுகைகளை வழங்கியுள்ளது. இந்த TRQகள், இறக்குமதிகளின் ஏதாவது திடீர் எழுச்சியில் இருந்து நமது உள்நாட்டுத் தொழில்துறையைப் பாதுகாக்கும்.

**கேள்வி 12: இந்தியா-ஐக்கிய அரபு அமீரகம் CEPA இன் கீழ் உள்ளடக்கப்பட்ட தயாரிப்புகளுக்கு ஏதேனும் சுங்கக் கட்டண ஒதுக்கீடுகள் பொருந்துமா?**

பதில்: ஐக்கிய அரபு அமீரகம் அதன் எந்தவொரு தயாரிப்புக்கும் சுங்கக் கட்டண ஒதுக்கீட்டை (TRQ) வழங்கவில்லை, அதேசமயம் ஐக்கிய அரபு அமீரகத்திற்கு நலம்பயக்கும் ஏற்றுமதி தயாரிப்புகளுக்கு இந்தியா பெரும்பாலும் சுங்கக் கட்டண ஒதுக்கீட்டை (TRQ) சேர்த்து அல்லது சேர்க்காமல் சுங்கக் குறைப்பு (TR) வடிவில் சலுகைகளை வழங்குகிறது. TRQ வழங்கப்பட்டுள்ள சுங்கக் கட்டணத்தின் கீழ் வரும் தயாரிப்புகள் ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் முக்கிய எண்ணெய் அல்லாத தயாரிப்புகளில் 63% க்கும் அதிகமான அளவில் உள்ளன.

அதேசமயம், இந்தியா ஐக்கிய அரபு அமீரகத்திற்கு சில தயாரிப்புகளுக்கு TRQ வழங்குகிறது. அவையாவன: தங்கத்தின் மீதான TRQ (5 ஆண்டுகளில் 200 டன் TRQ உடன் 1% சுங்கக் குறைப்புடன்), தங்க நகைகள் (5% சுங்கக் குறைப்பு மற்றும் 5 ஆண்டுகளில் 2.5 டன் TRQ உடன்), காப்பர் (2017-19 காலகட்டத்திற்கான சராசரி இறக்குமதிகளில் 150% TRQ 5 ஆண்டுகளில் பல கட்டங்களாக சுங்க நீக்கம்), பாலிஎதிலீன் மற்றும் பாலிபுரோப்பிலீன் (TRQ இன் ஒப்புக்கொள்ளப்பட்ட முழுமையான அளவில் 7 ஆண்டுகளில் 50% TR).

**கேள்வி 13: ஒப்பந்தத்தில் ஏதேனும் சுங்கத் தீர்வு நடைமுறைகள் வழங்கப்பட்டுள்ளதா?**

பதில்: சுங்க நடைமுறைகள் தொடர்பான அனைத்து விதிகளும் முன்கணிக்கத்தகுந்த, தொடர்ந்து ஒரே சீரான, வெளிப்படையான மற்றும் நியாயமான முறையில் இருக்கும். ஒப்பந்தத்தின்படி சுங்கத் தீர்வு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் எளிமைப்படுத்தப்படும். சுங்க நடைமுறைகளை எளிதாக்குவதற்கு தகவல் மற்றும் தகவல்தொடர்பு தொழில்நுட்பத்தின் உதவி பயன்படுத்தப்படும். சுங்க நடைமுறைகளை ஒத்திசைவாக்குவதற்கு நாடுகள் பன்னாட்டு செந்தரங்களையும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளையும் பயன்படுத்திக் கொண்டிருக்கும்.

**கேள்வி 14: வர்த்தகத்திற்கான தொழில்நுட்பத் தடை (TBT) தொடர்பாக என்னென்ன செந்தரங்கள் பின்பற்றப்படுகின்றன?**

பதில்: தொழில்நுட்ப ஒழுங்குமுறைகள், செந்தரங்கள் மற்றும் இணக்க மதிப்பீட்டு நடைமுறைகள் ஆகிய யாவும், வர்த்தகத்திற்கான தொழில்நுட்பத் தடைகள் பற்றிய WTO ஒப்பந்தத்தின் இணைப்பு 1A க்கு இணக்கமாக வரையறுக்கப்படும்.

**கேள்வி 15: துப்புரவு மற்றும் தாவரநல நடவடிக்கைகள் (SPS) தொடர்பாக என்னென்ன செந்தரங்கள் பின்பற்றப்படுகின்றன?**

பதில்: WTO இன் துப்புரவு மற்றும் தாவரநல நடவடிக்கைகள் குறித்த ஒப்பந்தத்தில் இணைப்பு 1A இல் குறிப்பிடப்பட்டுள்ள துப்புரவு மற்றும் தாவரநல நடவடிக்கைகள் உணவுத் தயாரிப்புகளுக்குப் பொருந்தும்.

**கேள்வி 16: ஒப்பந்தத்தை திறனாய்வு செய்து செயலாக்குவதற்கான விதிகள் யாவை?**

பதில்: ஒப்பந்தத்தின் இயக்கத்தைப் பற்றி, அடுத்து என்ன செய்வது என்று முடிவெடுப்பதற்காக கவனமாக சிந்திப்பதற்கு ஒப்பந்தத்தைத் திறனாய்வு செய்யும் கருத்து நிறுவப்பட்டுள்ளது மற்றும் அதன் அடிப்படையில் எதிர்கால நடவடிக்கையின் போக்கு பரிந்துரைக்கப்படுகிறது. இந்த ஒப்பந்தம் கூட்டுக் குழு மூலம் இயக்கப்பட்டு செயலாக்கப்படுகிறது. ஒப்பந்தத்தை மேலும் மேம்படுத்துவதற்கான கூடுதல் நடவடிக்கைகளை பரிசீலிக்கும் நோக்கத்துடன் ஒப்பந்தத்தை திறனாய்வு செய்வதற்காக கூட்டுக் குழு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கூடும்.

**கேள்வி 17: ஒப்பந்தத்தின் கீழ் பூசல் தீர்வு இயங்கமைப்புக்கான ஏற்பாடு என்ன?**

பதில்: தரப்புகள், அறிவுரைப் பெறல் மற்றும் பேச்சுவார்த்தைகள் மூலம் பூசலைத் தீர்க்க வேண்டும், இதில் தீர்வு கிடைக்கவில்லை என்றால் அவர்கள் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட நடுவர் குழுவை நாடலாம். பூசலுக்குரிய ஒவ்வொரு தரப்பும் ஒரு உறுப்பினரை நியமிக்க வேண்டும் மற்றும் குழுவின் தலைவராக இருக்கும் மூன்றாவது உறுப்பினர் இருதரப்பு ஒப்பந்தத்தின் மூலம் நியமிக்கப்படுவார்.

**கேள்வி 18: இந்தியா- ஐக்கிய அரபு அமீரகம் CEPA இல் மருந்துப் பொருட்கள் மீது ஏதேனும் ஏற்பாடு உள்ளதா?**

பதில்: ஆம், வர்த்தக ஒப்பந்தத்தில் முதன்முறையாக, இந்திய மருந்துப் பொருட்களின் அணுகலை எளிதாக்குவதற்கு ஒரு தனி இணைப்பு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது, அதிலும் குறிப்பாக, இந்த தனி இணைப்பில், யுனைடெட் ஸ்டேட்ஸ் (USFDA), யுனைட்ட் கிங்டம் (UKMHRA), ஐரோப்பிய ஒன்றியம் (EMA), மற்றும் ஜப்பான் (PMDA) போன்ற வளர்ந்த நாடுகளின் கட்டுப்பாட்டாளர்களால் ஒப்புதலளிக்கப்பட்ட தயாரிப்புகளுக்கு 90 நாட்களில் தானியங்கிப் பதிவு மற்றும் சந்தைப்படுத்தல் ஒப்புதலளிப்பு வழங்கப்படுகிறது.

**கேள்வி 19: இந்தியா-ஐக்கிய அரபு அமீரகம் CEPA இல் உள்ள குறிப்பிடத்தக்க ஏற்பாடுகள் யாவை?**

பதில்: இந்தியா- ஐக்கிய அரபு அமீரகம் CEPA இல் பல குறிப்பிடத்தக்க ஏற்பாடுகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. அவற்றில் சில கீழே பட்டியலிடப்பட்டுள்ளன -

i. வர்த்தக ஒப்பந்தத்தில் முதன்முறையாக, இந்திய மருந்துப் பொருட்களின் அணுகலை எளிதாக்குவதற்கு ஒரு தனி இணைப்பு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது, அதிலும் குறிப்பாக, இந்த தனி இணைப்பில், யுனைடெட் ஸ்டேட்ஸ் (USFDA), யுனைட்ட் கிங்டம் (UKMHRA), ஐரோப்பிய ஒன்றியம் (EMA), மற்றும் ஜப்பான் (PMDA) போன்ற வளர்ந்த நாடுகளின் கட்டுப்பாட்டாளர்களால் ஒப்புதலளிக்கப்பட்ட தயாரிப்புகளுக்கு 90 நாட்களில் தானியங்கிப் பதிவு மற்றும் சந்தைப்படுத்தல் ஒப்புதலளிப்பு வழங்கப்படுகிறது.

ii. எஃகு தயாரிப்புகளுக்கான தயாரிப்புச் சார்ந்த விதி என்ற முறையில் “உருக்கப்பட்டு ஊற்றப்பட்டது” முடிவளவை ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

iii. “நிரந்தர நலக்காப்பு இயங்கமைப்பு” முதன்முறையாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

iv. “டிஜிட்டல் வர்த்தகம் & அரசு கொள்முதல்“ என்ற அத்தியாயமும் ஒப்பந்தத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது

## சேவைகள்

**கேள்வி 1: சேவைகள் ஒப்பந்தத்தில் எத்தனை துறைகள் மற்றும் துணைத் துறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன?**

பதில்: இரு நாடுகளும் 11 பரந்த வகை சேவைகளில் ஈடுபாட்டுறுதிகளை மேற்கொண்டுள்ளன. பின்வருவன உள்ளிட்டவை: "வணிகச் சேவைகள்", "தகவல்தொடர்புச் சேவைகள்", "கட்டுமானம் மற்றும் தொடர்புடைய பொறியியல் சேவைகள்", "விநியோகச் சேவைகள்", "கல்விச் சேவைகள்", "சுற்றுச்சூழல் சேவைகள்", "நிதிச் சேவைகள்", "சுகாதாரநலம் தொடர்பான மற்றும் சமூக சேவைகள்", "சுற்றுலா மற்றும் பயணம் தொடர்பான சேவைகள்", "மனமகிழ், பண்பாட்டு மற்றும் விளையாட்டுச் சேவைகள்" மற்றும் "போக்குவரத்துச் சேவைகள்".

சேவைகளில் ஏறத்தாழ 100 துணைத் துறைகளை இந்தியா செயலாட்கொண்டுள்ள நிலையில், ஐக்கிய அரபு அமீரகம் 11 பரந்த சேவைத் துறைகளில் இருந்து ஏறத்தாழ 111 துணைத் துறைகளை செயலாட்கொண்டுள்ளது.

**கேள்வி 2: ஐக்கிய அரபு அமீரகத்தின் / இந்தியாவின் பொருளாதாரத்தில் சேவைகள் துறையின் பங்களிப்பு என்ன?**

பதில்: உலக வங்கியின் உலக வளர்ச்சிக் குறிகாட்டிகளின்படி (2020), சேவைகள் துறையானது இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 48.9% மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 58.2% பங்கு வகிக்கிறது.

**கேள்வி 3: சேவைகளில் ஐக்கிய அரபு அமீரகத்தின் ஈடுபாட்டுறுதிகளின் முக்கிய அம்சங்கள் யாவை?**

பதில்: ஐக்கிய அரபு அமீரகம் GATS / சிறந்த FTA மற்றும் சேவைகளில் ஈடுபாட்டுறுதியை மேற்கொண்டுள்ளது.

- சேவைகளில் அனைத்து முக்கியமான துணைத் துறைகளிலும் ஐக்கிய அரபு அமீரகதத்தால் வணிக ரீதியாக அர்த்தமுள்ள சந்தை அணுகல் ஈடுபாட்டுறுதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- இந்தியாவிற்கு நலம்பயக்கும் பல சேவைத் துறைகள் ஐக்கிய அரபு அமீரகத்தால் செயலாட்கொள்ளப்பட்டுள்ளன. அவையாவன. தொழில்முறைச் சேவைகள் (சட்டச் சேவைகள், கணக்கியல், வரிவிதிப்பு, கட்டிடக்கலைச் சேவைகள், பொறியியல், ஒருங்கிணைந்த பொறியியல், நகர்ப்புறத் திட்டமிடல் மற்றும் இயற்காட்சியமைப்புச் சேவைகள், மருத்துவம், பல் மருத்துவம் மற்றும் கால்நடைச் சேவைகள், நர்சிங் சேவைகள் போன்றவை), கம்ப்யூட்டர் தொடர்பான சேவைகள், ஒலி-ஒளிச் சேவைகள், பிற வணிகச் சேவைகள், R&D சேவைகள், கல்விச் சேவைகள், சுகாதாரநலச் சேவைகள்,

சுற்றுச்சூழல் சேவைகள், நிதிச் சேவைகள், சுற்றுலா மற்றும் பயணம் தொடர்பான சேவைகள், போக்குவரத்துச் சேவைகள் போன்றவை.

- எல்லைத் தாண்டி சேவைகளை வழங்குவதற்காகவும் வணிக இருப்பு மூலம் வழங்கப்படும் சேவைகளுக்காகவும் ஐக்கிய அரபு அமீரகதத்தால் வணிக ரீதியாக அர்த்தமுள்ள சந்தை அணுகல் ஈடுபாட்டுறுதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**கேள்வி 4: பயன்முறை 1 மற்றும் பயன்முறை 2 இன் கீழ் இந்திய சேவை வழங்குநர்களுக்கு ஐக்கிய அரபு அமீரகம் என்ன வழங்குகிறது?**

பதில்: ஐக்கிய அரபு அமீரகம் தொழில்முறை சேவைகளின் கீழ் துணைத் துறைகளுக்காக பயன்முறை 1 மற்றும் 2 இன் கீழ் கணிசமான ஈடுபாட்டுறுதிகளை செயலாட்கொண்டுள்ளது பிற வணிகச் சேவைகள் கம்ப்யூட்டர் தொடர்பான சேவைகள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுச் சேவைகள் வாடகை/குத்தகைச் சேவைகள் கல்விச் சேவைகள் சுற்றுச்சூழல் சேவைகள் நிதிச் சேவைகள் சுகாதாரநலம் மற்றும் தொடர்புடைய சமூக சேவைகள் சுற்றுலா மற்றும் பயணம் தொடர்பான சேவைகள், மனமகிழ், பண்பாட்டு மற்றும் விளையாட்டுச் சேவைகள் மற்றும் போக்குவரத்துச் சேவைகள்.

**கேள்வி 5: பயன்முறை 3 இன் கீழ் இந்திய சேவை வழங்குநர்களுக்கு ஐக்கிய அரபு அமீரகம் என்ன வழங்குகிறது?**

பதில்: ஐக்கிய அரபு அமீரகம் சேவைகளில் பெரும்பாலான துணைத் துறைகளில் பெரும்பான்மையான வெளிநாட்டு ஈக்விட்டி பங்குகளை செயலாட்கொண்டுள்ளது. ஐக்கிய அரபு அமீரகம் பின்வரும் சேவைகளில் 100% வெளிநாட்டு ஈக்விட்டியை செயலாட்கொண்டுள்ளது கம்ப்யூட்டர் தொடர்பான சேவைகள் (CPC 841 -845), ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுச் சேவைகள், மேலாண்மை அறிவுரைச் சேவைகள், தொழில்நுட்பச் சோதித்தல் மற்றும் பகுப்பாய்வுச் சேவைகள், மருத்துவமனைச் சேவைகள், விமானப் போக்குவரத்து சேவைகள் (கம்ப்யூட்டர் முன்பதிவு அமைப்புகள் மற்றும் விமானம் மற்றும் அதன் பாகங்கள் பராமரிப்பு மற்றும் பழுதுநீக்கல் சேவைகள்), மற்றும் இரயில் போக்குவரத்துச் சேவைகள்.

**கேள்வி 6: இந்தியா-ஐக்கிய அரபு அமீரகம் CEPA இன் கீழ் MoNP (இயற்கை நபர்களின் இயக்கம்) பற்றிய இணைப்பில் என்னென்ன வகைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன?**

பதில்: வணிக வருகையாளர்கள், பெருநிறுவனத்திற்கு உள்ளாக மாற்றப்படுபவர்கள் மற்றும் ஒப்பந்தச் சேவைகள் வழங்குநர்கள் ஆகியோருக்கு பல்வேறு சேவைத் துறைகளில் சந்தை அணுகல் வழங்கப்பட்டுள்ளது.

**கேள்வி 7: இந்திய சேவை வழங்குநர்களின் பல்வேறு வகைகளுக்காக ஐக்கிய அரபு அமீரகத்தில் தங்குவதற்காக அனுமதிக்கப்பட்டுள்ள அதிகபட்ச காலம் எவ்வளவு?**

பதில்: வணிக வருகையாளர்கள் (BV) - எந்தவொரு 12-மாத காலத்திலும் 90 நாட்கள்; பெருநிறுவனத்திற்கு உள்ளாக மாற்றப்படுபவர்கள் (ICTs) - 3 ஆண்டுகள் (கூடுதல் ஆண்டுகளுக்கு புதுப்பித்தலுக்கு உட்பட்டது); ஒப்பந்தச் சேவை வழங்குநர்கள் - 90 நாட்கள் (ஒப்புதலளிப்புக்கு உட்பட்டு மேலும் சம அளவு காலத்திற்கு புதுப்பிக்கத்தக்கது).

**கேள்வி 8: IT/ ITeS இன் கீழ் ஐக்கிய அரபு அமீரகத்தால் வழங்கப்பட்டுள்ள ஈடுபாட்டுறுதிகள் இந்திய சேவை வழங்குநர்களுக்கு பயனுள்ளதாக உள்ளதா?**

பதில்: ஆம், கம்ப்யூட்டர் தொடர்பான சேவைகளில் ஐக்கிய அரபு அமீரகம் முழு ஈடுபாட்டுறுதிகளையும் மேற்கொண்டுள்ளது. இந்த ஈடுபாட்டுறுதிகள் ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள இந்திய IT/ITeS க்கு பலனளிக்கும்.

**கேள்வி 9: "நிதிச் சேவைகளில்" ஐக்கிய அரபு அமீரகத்தின் துறைசார் ஈடுபாட்டுறுதி என்ன?**

பதில்: காப்பீடு மற்றும் காப்பீடு தொடர்பான சேவைகளில் ஈடுபாட்டுறுதிகள் மற்றும் வங்கியியல் மற்றும் பிற நிதிச் சேவைகள் உட்பட, நிதிச் சேவைகளின் கீழ் பெரும்பாலான துணைத் துறைகளில் ஐக்கிய அரபு அமீரகம் செயலாட்கொண்டுள்ளது.

**கேள்வி 10: தொழில்முறை தகுதிகளை இருதரப்பும் அங்கீகரிப்பது குறித்த ஏற்பாடு உள்ளதா?**

பதில்: ஆம், ஒப்பந்தத்தில் உள்ள தொழில்முறை மற்றும் திறன்கள் தகுதிகளை இருதரப்பும் அங்கீகரிப்பது தொடர்பான கடமைகள், தொழில் நெறிஞர்களுக்கும் திறன்பெற்ற பணியாளர்களுக்கும் சேவைகளை வழங்க உதவும்.

## அரசு கொள்முதல்

**கேள்வி 1: அரசு கொள்முதல் அத்தியாயத்தில் இரு தரப்பாலும் எடுக்கப்படும் ஈடுபாட்டுறுதிகள் யாவை?**

**பதில்:**

a) அரசு கொள்முதல் (GP) அத்தியாயமானது வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான ஒன்றிய அரசு அமைச்சகங்கள் & துறைகளுக்கு மட்டுமே GPன் செயல்முறை, நடைமுறை மற்றும் வெளிப்படைத்தன்மை கூறுகள் தொடர்பான சில குறிப்பிட்ட பிணைப்பு ஈடுபாட்டுறுதிகளைக் கொண்டுள்ளது.
b) இது, பொது நிதி விதிகளின் ஏற்பாடுகளையும், மேக் இன் இந்தியா ஆணைக்கான முன்னுரிமை மற்றும் MSME முன்னுரிமைக் கொள்கைகள் உட்பட அதன் கீழ் வழங்கப்பட்ட ஆணைகளையும் முழுமையாகப் நலங்காக்கிறது.
c) இரு தரப்பினரும் தங்களுடைய தற்போதைய மற்றும் எதிர்கால உள்நாட்டுச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் மற்றும் உள்நாட்டு முன்னுரிமைகள் பற்றிய திட்டங்களின் அடிப்படையிலான தங்கள் உரிமைகளை தம்மிடம் கொண்டிருப்பதால், எந்தவொரு கூடுதல் சந்தை அணுகலுக்கும் எந்தவொரு ஈடுபாட்டுறுதியும் இல்லை.
d) மேலும், இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த முதல் மூன்று ஆண்டுகளுக்கு பூசல் தீர்வு இயங்கமைப்பு பொருந்தாது மற்றும் பின்னாளில் ஒப்பந்தத்தின் பகுதியளவுக்கு அல்லது முழுமையளவுக்கு அதன் பொருந்தும் திறன் என்பது நான்காவது ஆண்டில் இரு தரப்பினராலும் திறனாய்வு செய்யப்படுவதற்கு உட்பட்டது.

**கேள்வி 2: உள்நாட்டு கொள்முதலுக்கான தற்போதைய கொள்கை வெளியைத் தக்கவைத்துக்கொள்ள என்னென்ன நலக்காப்புகள் உள்ளன?**

பதில்:

a) வாய்ப்பளவு சில குறிப்பிட்ட ஒன்றிய அரசின் அமைச்சகங்கள் மற்றும் துறைகளுக்கு மட்டுமே என்ற வரையறைக்கு உட்பட்டது. மேலும், மாநில மற்றும் உள்ளூர் அளவிலான கொள்முதல்கள் உள்ளடக்கப்படவில்லை.
b) சரக்குகள், சேவைகள் மற்றும் கட்டுமானச் சேவைகளுக்கான வரம்புகள் மிக உயர்ந்த அளவில் அதாவது ரூ. 200 கோடிக்கும் அதிகமாகத் தக்கவைக்கப்பட்டுள்ளன (ஐக்கிய அரபு அமீரகம் இதை மிகக் குறைந்த அளவில், சரக்குகள் மற்றும் சேவைகளுக்கு ரூ. 1.6 கோடியும், கட்டுமானச் சேவைகளுக்கு ரூ. 60 கோடியும் தக்கவைத்துள்ளது).

[1]ஒவ்வொரு தரப்பினரின் அட்டவணையிலும் இணைப்பு 10Aல் (இந்தியாவுக்கானது) அல்லது இணைப்பு 10Bல் (ஐக்கிய அரபு அமீரகத்திற்கானது) குறிப்பிடப்பட்டுள்ளது

c) உள்நாட்டுத் தொழில்துறைகளுக்கான முன்னுரிமைக் கொள்கைகள் தக்கவைக்கப்பட்டுள்ளன (PMI ஆணை மற்றும் MSME முன்னுரிமைகள்)
d) தோற்றுவாய் விதிகள் (சரக்குகள் அத்தியாயத்தில் பொருந்துவதற்கேற்ப) GP க்கும் பொருந்தும்.

**கேள்வி 3: GP ஏற்பாடுகள் அனைத்து வகையான இந்திய நிறுவனங்களுக்கும் பொருந்துமா?**

பதில்:

a) GP ஏற்பாடுகள் குறிப்பிட்ட ஒன்றிய அரசின் அமைச்சகங்கள் மற்றும் துறைகளுக்கு மட்டுமே பொருந்தி இருந்திருக்கும்.
b) மேலும், குறிப்பிடப்பட்ட வரம்புகளுக்கு அப்பாற்பட்ட கொள்முதல்கள் உள்ளடக்கப்படும் (சரக்குகள், சேவைகள் மற்றும் கட்டுமானச் சேவைகளுக்கு, வரம்பு மதிப்பு ரூ. 200 கோடிக்கு மேலாக உள்ளது).
c) மாநில மற்றும் உள்ளூர் அளவிலான நிறுவனங்கள் உள்ளடக்கப்படவில்லை.

**கேள்வி 4: GP அத்தியாயத்தின் கீழ் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கான தற்போதைய முன்னுரிமைக் கொள்கைகளைத் தக்கவைப்பதற்கான ஏற்பாடுகள் யாவை?**

பதில்:

i) **<u>இந்தியா:</u>**

மற்றவற்றுக்கு இடையில், பின்வரும் ஏற்பாடுகள் இந்தியாவின் உள்நாட்டு முன்னுரிமை கொள்கைகளைத் தக்கவைப்பதை உறுதி செய்கின்றன:

a) <u>உள்ளடக்கக்கூறு:</u>

- <u>வரையறுக்கப்பட்ட ஒன்றிய அரசு அமைச்சகங்கள் / அரசாங்கங்கள் மட்டுமே</u> உள்ளடக்கப்பட்டுள்ளன, அதுவும் சரக்குகள், சேவைகள் மற்றும் கட்டுமானச் சேவைகளை கொள்முதல் செய்வதற்கான உயர் வரம்புகளுடன்;

  (பாதுகாப்புத்துறை அமைச்சகம் போன்ற பெரும் எண்ணிக்கையிலான ஒன்றிய அமைச்சகங்கள் விலக்கப்பட்டுள்ளன, இது தவிர, துறைகள் மற்றும் இணைக்கப்பட்ட அமைப்புகள், தன்னாட்சி அமைப்புகள், அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், கட்டுப்பாட்டாளர்கள் அல்லது ஒன்றிய அரசின் கீழ் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ வரும் வேறு ஏதாவது நிறுவனங்கள் உட்பட ஒன்றிய அரசின் சார்பு நிறுவனங்களும் விலக்கப்பட்டுள்ளன);

- துணை-கூட்டாட்சி மற்றும் உள்ளூர் அளவிலான கொள்முதல்கள் விலக்கப்பட்டுள்ளன.

b) பொது கொள்முதல் (மேக் இன் இந்தியாவுக்கு முன்னுரிமை) ஆணை, 2017 -இன் கீழ் அல்லது வேறு ஏதேனும் ஆணையின் கீழ், அவ்வப்போது திருத்தப்படுவதற்கேற்ப செய்யப்படும் கொள்முதல்கள்.

c) <u>கூடுதலாக,</u> வாய்ப்பளவில் இருந்து விலக்கப்பட்ட கொள்முதல்கள்:

- கட்டுமானத் திட்டப்பணிகள் அல்லது ஏதேனும் உள்கட்டமைப்புத் திட்டப்பணிகள்.
- மருத்துவச் சாதனங்கள், மருந்துப் பொருட்கள், சிகிச்சை முறைகள், நோயறிதல்கள் உள்ளிட்ட சுகாதாரநலம்பேணல் துறைகள்.
- வேளாண் ஆதரவுத் திட்டங்கள், மனித உணவூட்டல் திட்டங்கள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட வேளாண் தயாரிப்புகள் (எ.கா. அவசர நிவாரண உதவி உட்பட உணவு உதவி).
- இந்திய எல்லைக்கு வெளியே தூதரக கட்டிடங்களை நிறுவ, இயக்க தேவைப்படும் சரக்குகள் மற்றும் சேவைகள் போன்றவை.

II. **<u>ஐக்கிய அரபு அமீரகம்:</u>** பின்வருபவை வாய்ப்பளவில் இருந்து விலக்கப்பட்டுள்ளன:

a) ஐக்கிய அரபு அமீரக அமைச்சரவை தீர்மானத்திற்கு இணக்கமாக, ‘கூட்டாண்மைத் திட்டப்பணி’ என வகைப்படுத்தப்படும் தனியார் துறையுடனான கூட்டாண்மை ஒப்பந்தங்கள்

b) ஐக்கிய அரபு அமீரக அமைச்சரவை தீர்மானத்தில் விவரிக்கப்பட்டுள்ளபடி, ஒருமித்த உள்நாட்டினுள் மதிப்புத் திட்டத்திற்கு இணக்கமாக செய்யப்பட்ட கொள்முதல்.

c) எண்ணெய், எரிவாயு அல்லது கனிமத் துறைகளுடன் தொடர்புடைய சரக்குகள், சேவைகள் அல்லது கட்டுமானச் சேவைகளின் கொள்முதல்.

d) உள்துறை அமைச்சகத்தால் அல்லது பாதுகாப்பு அல்லது இராணுவப் பண்பு கொண்ட எந்தவொரு நிறுவனத்தாலும் செய்யப்படும் இராணுவப் பண்பு கொண்ட கொள்முதல்.
e) மருந்துகள் அல்லது வெறிமயக்க மருந்துகளின் கொள்முதல்.
f) கட்டுமானத் திட்டப்பணிகள் மற்றும் ஒப்பந்தங்கள் தொடர்பான கொள்முதல்.
g) கொள்முதல் ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக இருக்கும் அல்லது தற்செயலாக அமையும் போக்குவரத்துச் சேவைகளின் கொள்முதல்.
h) வேளாண் ஆதரவுத் திட்டங்கள், மனித உணவூட்டல் திட்டங்கள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட வேளாண் தயாரிப்புகளின் (எ.கா. அவசர நிவாரண உதவி உட்பட உணவு உதவி) கொள்முதல்.

**கேள்வி 5: FTA கூட்டாளிகளின் பொது GP அத்தியாயங்களில் இருந்து முக்கிய விலகல்கள் யாவை?**

பதில்:

a) பன்னாட்டுச் செந்தரங்களுக்கு ஒரு விருப்பத்தேர்வாக தேசிய செந்தரங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன்
b) உள்நாட்டுச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளின்படி (GFR போன்றவை) கொள்முதல் செயல்முறைக்கான கடுமையான காலக்கெடு மாற்றப்பட்டுள்ளது
c) FTA களில் GP அத்தியாயத்தின் கீழ் அல்லது WTO GPA இன் கீழ் குறிப்பிட்ட தோற்றுவாய் விதிகள் (RoO) பொருந்தாது. முதன்முறையாக, தவறான பயன்பாட்டைத் தடுப்பதற்காக GP இன் கீழ் சரக்குகளின் தோற்றுவாய் விதிகள் (RoO) அத்தியாயத்துடன் நேரமைக்கப்பட்டுள்ளது
d) உள்நாட்டுக் கொள்கைகளைத் தக்கவைத்துக்கொள்வதற்காக உள்நாட்டு முன்னுரிமைகள் உள்ளமைக்கப்பட்டுள்ளன.

**கேள்வி 6: இந்தியா WTO GPA இல் சேர திட்டமிட்டுள்ளதா? பேச்சுவார்த்தையின் கீழ் உள்ள மற்ற FTAக்களில் GP அத்தியாயங்களை வைத்திருக்க இந்தியா திட்டமிட்டுள்ளதா?**

பதில்:

a) 2010 ஆம் ஆண்டு முதற்கொண்டு WTO GPA இன் கீழ் இந்தியா ஒரு பார்வையாளராக உள்ளது, தற்போது வரை, அதில் சேரும் திட்டம் எதுவும் இல்லை. (தற்போது, GPA ஆனது 48 WTO உறுப்பினர்களை உள்ளடக்கிய 21 தரப்புளைக் கொண்டுள்ளது).

b) இதுவரை, இந்தியா அதன் GP அத்தியாயங்களின் கீழ் எந்தவொரு சந்தை அணுகல் ஏற்பாட்டிற்குள்ளும் நுழையவில்லை. இந்தியா-ஜப்பான் CEPA இல், பிணைப்பு என்பது வெளிப்படைத்தன்மை, தகவல் பகிர்வு மற்றும் இந்தியா தனது FTA கூட்டாளிகள் எவருக்கும் GP சந்தை அணுகலை அனுமதிக்கும் பட்சத்தில், ஜப்பான் இந்தியாவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட போதுமான வாய்ப்பைக் கோருகின்ற வாய்ப்பளவு ஆகிய வரையறைக்கு உட்பட்டது. இதேபோல், இந்தியா- ஐக்கிய அரபு அமீரகம் CEPAல் GP அத்தியாயத்தின் கீழ் சந்தை அணுகல் ஈடுபாட்டுறுதி எதுவும் செய்யப்படவில்லை

c) பெரும்பாலான நவீன FTAக்கள் விரிவான ஒப்பந்தங்கள் ஆகும், இவை GP உட்பட பல அத்தியாயங்களை உள்ளடக்கியது. இதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். GP பற்றிய முழு உரையை நாங்கள் முதன்முறையாகக் கொண்டிருப்பதால், இது கவனமாக ஆய்வு செய்யப்பட்டு, பரந்த அளவில் அமைச்சர்களுக்கு இடையேயான / பங்குதாரர்களின் அறிவுரைப் பெற்ற பிறகு உருவாக்கப்பட்டுள்ளது. எதிர்கால ஒப்பந்தங்களில், இலட்சியத்தைப் பொறுத்து தற்போதைய GP அத்தியாயத்தின் உரை டெம்ப்ளேட்டாக மாறலாம் மற்றும் GP அத்தியாயத்தின் வாய்ப்பளவும் உள்ளடக்கக்கூறும் மாறுபடலாம்.

**கேள்வி 7: ஐக்கிய அரபு அமீரகத்தில் GPன் தற்போதைய சந்தை அளவு என்ன?**

பதில்: கூட்டாட்சி மட்டத்தில், ஐக்கிய அரபு அமீரகத்தில் சராசரி GP அளவு ஏறத்தாழ 6.8 பில்லியன் அமெரிக்க டாலர்கள் ஆகும்.

## டிஜிட்டர் வர்த்தகம்

**கேள்வி 1: இந்தியா- ஐக்கிய அரபு அமீரகம் CEPAல் டிஜிட்டல் வர்த்தக அத்தியாயத்தின் நோக்கமும் குறிக்கோளும் என்ன?**

பதில்: இந்தியா- ஐக்கிய அரபு அமீரகம் CEPAல் டிஜிட்டல் வர்த்தக அத்தியாயம் - என்பது ஒரு எதிர்கால, உயர் இலட்சிய அத்தியாயமாகும், இது டிஜிட்டல் வர்த்தகம் வழங்கும் பொருளாதார வளர்ச்சியையும் வாய்ப்பையும் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது, மற்றவற்றுக்கு இடையில், இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதன் மூலம் இரு நாடுகளிலும் டிஜிட்டல் வர்த்தகத்தை மேலும் முன்னேற்றுவதற்கு உகந்த சூழலை பேணி வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது, இருதரப்பு மற்றும் உலகளவில் டிஜிட்டல் வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கு இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் இடையே ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்த முயல்கிறது.

**கேள்வி 2: அத்தியாயத்தில் இந்தியாவும் ஐக்கிய அரபு அமீரகமும் எந்தெந்த துறைகளில் ஈடுபாட்டுறுதிகளை மேற்கொண்டுள்ளன?**

பதில்: டிஜிட்டல் வர்த்தக அத்தியாயத்தில் உள்ள ஈடுபாட்டுறுதிகள் இயல்பில் சிறந்த பெருமுயற்சியாக மட்டுமே உள்ளன, மேலும் பூசல் தீர்வு இயங்கமைப்பும் அத்தியாயத்தில் பொருந்தாது. இது காகிதமில்லா வர்த்தகம், உள்நாட்டு மின்னணு பரிமாற்றக் கட்டமைப்புகள், அதிகாரச் சான்றளிக்கப் பெறுதல், ஆன்லைன் நுகர்வோர் பாதுகாப்பு, கோரப்படாத வணிக மின்னணு செய்திகள், ஆள்சார் தரவுப் பாதுகாப்பு, எல்லை தாண்டிய தகவல் பாய்வு, வெளிப்படையான தரவு, டிஜிட்டல் நிர்வாகம், டிஜிட்டல் தயாரிப்புகளில் ஒத்துழைப்பு, மின்னணு பரப்புகைகள் மீதான சுங்க வரிகள், டிஜிட்டல் மற்றும் மின்னணு இன்வாய்ஸிங், டிஜிட்டல் மற்றும் மின்னணு பணம் செலுத்தல்கள், டிஜிட்டல் வர்த்தகத்திற்கான இன்டர்நெட் அணுகல் மற்றும் பயன்பாடு, சைபர் செக்யூரிட்டி மற்றும் ஒத்துழைப்பு போன்ற துறைகளில் சிறந்த பெருமுயற்சிகளை உள்ளடக்கியது.

**கேள்வி 3: டிஜிட்டல் வர்த்தகத்தில் சில முக்கிய உணர்திறன்களை அத்தியாயம் எவ்வாறு கையாள்கிறது?**

பதில்: டிஜிட்டல் தயாரிப்புகள் தொடர்பான சில முக்கிய உணர்திறன்களைத் தீர்க்க இந்தியாவும் ஐக்கிய அரபு அமீரகமும் ஒத்துழைப்பு ஒப்புரு ஒன்றை ஏற்றுக்கொண்டுள்ளன. எல்லைத் தாண்டிய தகவல் பாய்வைப் பொறுத்தவரை, இரு தரப்பினரும் தங்கள் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்புகளுக்கு உட்பட்டு மின்னணு தகவல் பாய்வுகளை மேம்படுத்த பெருமுயற்சி செய்ய ஒப்புக்கொண்டுள்ளனர்.

மின்னணு பரப்புகை மீதான சுங்க வரி பிரச்சினையில், இந்தியாவும் ஐக்கிய அரபு அமீரகமும் தரப்புகளுக்கு இடையேயான மின்னணு பரப்புகைகளுக்கு சுங்க வரிகளை விதிக்காத தற்போதைய நடைமுறையை தக்கவைக்க ஒப்புக்கொண்டுள்ளன, இந்த பிரச்சினையில் எதிர்காலத்தில் ஏதாவது WTO வருவிளைவுகளைக் கருத்தில் கொள்ளும் போது, இந்த நடைமுறையை சீர்செய்ய உரிமை உள்ளது. மேலும், டிஜிட்டல் வர்த்தகத்துடன் பின்னிப்பிணைந்துள்ள உணர்திறன்களைக் கருத்தில் கொண்டு, டிஜிட்டல் வர்த்தகம் பற்றிய அத்தியாயம் இயல்பிலேயே சிறந்த பெருமுயற்சியாக உள்ளது மற்றும் பூசல் தீர்வு இயங்கமைப்பும் இதற்குப் பொருந்தாது.

**கேள்வி 4: டிஜிட்டல் வர்த்தகத்தில் இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் இடையே எதிர்கால ஒத்துழைப்பின் துறைகள் யாவை?**

பதில்: டிஜிட்டல் வர்த்தகம் தொடர்பான ஒழுங்குமுறை விவகாரங்களில் பேச்சுவார்த்தையைத் தொடர இந்தியாவும் ஐக்கிய அரபு அமீரகமும் ஒப்புக் கொண்டுள்ளன. இது, ஆன்லைன் நுகர்வோர் பாதுகாப்பு, ஆள்சார் தரவுப் பாதுகாப்பு, பணமோசடித் தடுப்பு மற்றும் டிஜிட்டல் வர்த்தகத்திற்கான தடைகள் இணக்கம், கோரப்படாத வணிக மின்னணு செய்திகள், அதிகாரச் சான்றளிக்கப் பெறுதல், டிஜிட்டல் வர்த்தகம் தொடர்பான ECTA சொத்துக் கவலைகள், டிஜிட்டல் வர்த்தகத்தில் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான சவால்கள், டிஜிட்டல் நிர்வாகம், டிஜிட்டல் அடையாளங்கள் போன்ற துறைகளில் தகவலையும் அனுபவங்களையும் பரிமாறிக் கொள்ளும் நோக்கில் இருக்கும்.

**கேள்வி 5: இந்தியாவிலும் ஐக்கிய அரபு அமீரகத்திலும் உள்ள, இந்தத் துறையில் இயங்கும் பொருளாதார ஆபரேட்டர்களுக்கு/நுகர்வோர்களுக்கு டிஜிட்டல் வர்த்தக அத்தியாயம் எவ்வாறு உதவும்?**

பதில்: இந்த அத்தியாயம் டிஜிட்டல் வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கும் எளிதாக்குவதற்கும் தேவையான செயல்படுத்தும் சூழலமைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது, டிஜிட்டல் பொருளாதாரத்தில் பொருளாதார ஆபரேட்டர்களும் நுகர்வோரும் எதிர்கொள்ளும் சில முக்கிய தடைகளை கண்டறிந்து தீர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது, காகிதமில்லா வர்த்தகம், டிஜிட்டல் பணம் செலுத்தல்கள், ஆன்லைன் நுகர்வோர் பாதுகாப்பு, ஆள்சார் தரவுப் பாதுகாப்பு போன்ற பிரச்சினைகளுக்கு ஒரு கட்டமைப்பை வழங்குவதன் மூலம், டிஜிட்டல் வர்த்தகத்தின் பயன்பாடு மற்றும் மேம்பாட்டுக்கான தடைகளைத் தவிர்ப்பதன் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கிறது.

**கேள்வி 6: CEPA இல் முதலீடு மற்றும் வர்த்தகம் சார்ந்த குறிப்பிட்ட ஈடுபாட்டுறுதிகள் யாவை?**

பதில்: முதலீடு மற்றும் வர்த்தகம் பற்றிய அத்தியாயம் இயல்பிலேயே சிறந்த பெருமுயற்சியாகும், இதில் இரு தரப்பினரும் கவர்ச்சிகரமான முதலீட்டு சூழலை மேம்படுத்துவதற்கும் தயாரிப்புகள் மற்றும் சேவைகளில் வர்த்தகத்தை விரிவுபடுத்துவதற்கும் தங்கள் ஆசையை உறுதிப்படுத்துகின்றனர். முதலீடு மற்றும் வர்த்தக உறவுகளைக் கண்காணிக்கவும், முதலீடு மற்றும் வர்த்தகத்தை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புகளை அடையாளம் காணவும், முதலீடு மற்றும் வர்த்தகப் பாய்வுகளை மேம்படுத்தும் வகையில் பணியாற்றுவதற்கும், முதலீடு மற்றும் வர்த்தக மேம்பாடு மற்றும் எளிதாக்கல் பற்றிய ஐக்கிய அரபு அமீரகம்- இந்தியா தொழில்நுட்ப கவுன்சில் (கவுன்சில்) அமைக்க இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டுள்ளனர். முதலீடு பற்றிய அத்தியாயம் பூசல் தீர்வுக்கு உட்பட்டதல்ல.

**கேள்வி 7: SMEகள் பற்றிய அத்தியாயத்தின் குறிப்பிடத்தக்க அம்சங்கள் யாவை?**

பதில்: SMEகளின் இயங்காற்றலைத் தக்கவைத்து, அந்தந்த பொருளாதாரங்களின் போட்டித்தன்மையை மேம்படுத்துவதில் அவற்றின் அடிப்படைப் பங்கை அங்கீகரித்து, பொருளாதார மற்றும் வர்த்தகப் பிரச்சினைகளில் SMEகளின் கண்ணோட்டத்தை ஒருங்கிணைப்பதன் முக்கியத்துவத்தை மீண்டும் உறுதிப்படுத்தும் விதமாக, SMEகள் பற்றிய தனி அத்தியாயம் இந்தியா- ஐக்கிய அரபு அமீரகம் CEPA இல் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. SMEகள் பற்றிய அத்தியாயம், SMEகள் வர்த்தகம் மற்றும் முதலீட்டினால் உருவாக்கப்படும் வாய்ப்புகளை அணுகுவதற்கும் முழுமையாகப் பலனடைவதற்கும் SME களுக்கான திறனையும் நிலைமைகளையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட கூட்டுச் செயல்பாடுகளை மேற்கொள்ள ஒவ்வொரு தரப்பின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய SME பிரச்சினைகள் குறித்த குழு (SME குழு) ஒன்றை அமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. முதலீடு பற்றிய அத்தியாயம் பூசல் தீர்வுக்கு உட்பட்டதல்ல.

## ECTA சொத்துரிமைகள்

**கேள்வி 8: UAE-இல் உள்ள இந்தியாவின் ECTA சொத்துக்களுக்கு வலுவான பாதுகாப்பை இந்த ஒப்பந்தம் உறுதி செய்யுமா?**

**பதில்:** தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளை மேம்படுத்துதல், தொழில்நுட்பத்தைப் பரிவர்த்தனை செய்தல், பரப்புதல் ஆகியவற்றின் ஒட்டுமொத்த FTA நோக்கத்தை, உரிமைதாரர்களின் பரஸ்பர நன்மைக்காக, உரிமைகள் மற்றும் கடமைகளின் சமநிலையுடன் IPR அத்தியாயம் நன்கு பொருந்தி அமையப் பெறுகிறது.

IPR அத்தியாயம் அனைத்து IPRகளும் முறையாகப் பாதுகாக்கப்படுவதையும், போதிய அளவில் செயல்படுத்தப்படுவதையும் உறுதி செய்கிறது. ECTA சொத்து மொத்தம் 34 பொதுவிதிகளைக் கொண்டுள்ளது, இந்த அத்தியாயத்தின் முக்கியத் தலைப்புகள், ஒத்துழைப்பு மற்றும் அமலாக்கத்திற்கான விதிகளுடன், பொது விதிகள், பதிப்புரிமை மற்றும் அது தொடர்பான உரிமைகள்,வணிக முத்திரைகள்,புவியியல் குறியீடுகள், தனிக்காப்புரிமைகள் மற்றும் மரபியல் வளங்கள், பாரம்பரிய அறிவு ஆகியவை அடங்கும்.

**கேள்வி 9: IP அத்தியாயத்தால் இந்தியாவிற்கு என்ன நன்மைகள் ஏற்படுகின்றன?**

**பதில்:** புவியியல் குறியீடு உட்பட அதன் பாரம்பரிய அறிவைப் பாதுகாப்பதில் இந்தியா மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. எனவே, இத்துறையில் தனது நலன்களைப் பாதுகாக்க, பாரம்பரிய அறிவு மற்றும் மரபியல் வளங்கள் குறித்த இரண்டு குறிப்பிட்ட பிரிவுகளைச் சேர்ப்பதில் இந்தியா வெற்றி கண்டுள்ளது.

ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத் துறையில் மிகுந்த ஆர்வமுள்ள சந்தைகளில் UAE ஒன்றாகும். எனவே, இந்தியப் பதிப்புரிமைதாரர்களின் நலனைப் பாதுகாக்க தேவையான விரிவான நடவடிக்கைகளின் அவசியத்தைக் கவனத்தில்கொண்டும், பதிப்புரிமைதாரர்களின் உரிமைகளைக் கருத்தில்கொண்டும் தொழில்நுட்ப நடவடிக்கைகளின் பாதுகாப்பு தொடர்பான விதிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

**கேள்வி 10: இந்நாடுகளுக்கு இடையிலுள்ள மொழித் தடையை இந்த ஒப்பந்தம் எவ்வாறு நிவர்த்தி செய்கிறது?**

**பதில்:** இருதரப்பிலும் உள்ள பல்வேறு பங்குதாரர்களுக்கு இடையேயான தகவல்தொடர்பை எளிதாக்க, UAE தரப்பு தகவல்களை வழங்குவதுடன்,ஆங்கில மொழியில் IP உரிமை வைத்திருப்பவர்களுடன் தொடர்பு கொள்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயும் என்பதையும் இந்தியா உறுதி செய்தது. இது UAE-இல் IP தாக்கல் செய்யும் செயல்முறையை எளிதாக்கும், மேலும் அரபு மொழி மொழிபெயர்ப்புகளுடன் தொடர்புடைய செலவைக் குறைக்கும்.

**கேள்வி 11: இந்த FTA-வின் பின்னணியில் இந்தியா தனது உறுதிப்பாடு மற்றும் கடமையின் அடிப்படையில் அதன் டிஆர்ஐபி-களின் பணிஆணைக்கு அப்பால் சென்றுவிட்டதா?**

**பதில்:** இந்தியா தனது IPR விதிக்கு முன்னேற்றமான அணுகுமுறையை எடுத்துள்ளது. தற்போதைய IP கடமைகளுக்கு அப்பால் எந்த விதிகளுக்கும் இந்தியா உறுதி அளிக்கவில்லை, பொது மக்களின் நலன்கள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்துள்ளது.

**கேள்வி 12: CEPA-விற்காக இந்தியா தனது ECTA சொத்துரிமை சட்டங்களை மாற்ற வேண்டுமா?**

**பதில்:** இல்லை. CEPA-இல் உள்ள ECTA சொத்துரிமை அத்தியாயத்தில் இந்தியாவின் தற்போதைய ECTA சொத்துரிமை விதி மற்றும் பல்வேறு உலகளாவிய ஒப்பந்தங்களுக்கான இந்தியாவின் உறுதிப்பாட்டுடன் ஒத்துப்போகிறது. ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, CEPA அமலுக்கு வரும் நேரத்தில் IPR-இல் உள்ள பெரும்பாலான விதிகள் ஏற்கனவே இந்தியாவில் நடைமுறையில் உள்ளன.

**கேள்வி 13: IP அத்தியாயத்தில் பதிப்புரிமை மற்றும் அது தொடர்புடைய உரிமைகள் தொடர்பான விதிகள் என்ன?**

**பதில்:** ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு துறையில் இந்தியாவின் மிகுந்த ஆர்வத்தைக் கருத்தில்கொண்டு, IP அத்தியாயம் நகல் எடுத்தல், விநியோகம் மற்றும் தகவல்தொடர்பு ஆகிய உரிமைகளைப் பாதுகாக்க விரிவான நடவடிக்கைகளை வழங்குகிறது. மேலும், உரிமையாளரின் படைப்புகளை அங்கீகரிக்கப்படாத அணுகல் மற்றும் பயன்படுத்துவதைத் தடைசெய்வதற்கான தொழில்நுட்ப நடவடிக்கைகள் மற்றும் உரிமைகள் மேலாண்மைத் தகவல்களின் பாதுகாப்பின் பின்னணியில் கடமைகளை வழங்கும்.அந்த அளவிற்கு இது செல்கிறது.

**கேள்வி 14: இந்திய புவியியல் குறியீடுகளுக்கு IP அத்தியாயம் எவ்வாறு பாதுகாப்பை வழங்குகிறது?**

**பதில்:** UAE-இல் ஒரு குறிப்பிட்ட ஜிஎல் சட்டம் எதுவும் இல்லை, மேலும் ஜிஐ-கள் வணிக முத்திரைகள் மூலம் பாதுகாக்கப்பட்டாலும், விவசாயப் பொருட்கள், இயற்கைப் பொருட்கள் மற்றும் தொழில்துறை பொருட்கள், கைவினைப்பொருட்கள், உணவுப்பொருட்கள் உள்ளிட்ட உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் உட்பட அனைத்து வகை புவியியல் குறியீடுகளுக்கும் பாதுகாப்பு நீட்டிக்கப்பட்டுள்ளது.

**கேள்வி 15: IP அத்தியாயத்தில் வணிக முத்திரைகள் தொடர்பான விதிகள் என்ன?**

**பதில்:** வணிக முத்திரை பகுதியானது ஒலி முத்திரை மற்றும் நன்கு அறியப்பட்ட வணிக முத்திரைகள் உட்பட வணிக முத்திரைகளின் முழு நோக்கத்தையும் உள்ளடக்கியது. பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு நல்ல வகைப்பாட்டுடன் இணங்குவதுடன் பல வகைகளில் ஒரே விண்ணப்பத்தை தாக்கல் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பான விதிகளையும் இது வழங்குகிறது.

## வர்த்தகத் தீர்வுகள்

**கேள்வி 1: UAE-இல் இருந்து இறக்குமதியை அதிகரிப்பதில் இருந்து உள்நாட்டு உற்பத்தியாளர்களைப் பாதுகாக்க ஏதேனும் பாதுகாப்பு இயங்குமுறைகள் உள்ளதா?**

**பதில்:** ஆம், இருக்கிறது. இந்தியா கையொப்பமிட்ட எந்தவொரு இருதரப்பு ஒப்பந்தத்திலும் முதன்முறையாக பாதுகாப்பு இயங்குமுறையானது இயல்பாகவே நிரந்தரமாக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் இருக்கும்வரை எந்த நேரத்திலும் UAE-இல் இருந்து இறக்குமதியில் இத்தகைய திடீர் எழுச்சிக்கு எதிராக இது இந்திய தொழில்களை குறிப்பாக, எம்எஸ்எம்இ-க்களை பாதுகாக்கும் என்பதால் இது முக்கியத்துவம் வாய்ந்தது.

இருதரப்பு பாதுகாப்பு இயங்குமுறையின் கீழ், பொருந்தக்கூடிய கடமையானது விண்ணப்பத்தின் தேதியில் அல்லது இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் நாளுக்கு முன்பே எம்எஃப்என் நிலைக்கு மீட்டமைக்கப்படும்.

**கேள்வி 2: வர்த்தக மையமான UAE மூலம் பொருட்களை மற்ற நாடுகளால் கொண்டு சென்று குவிப்பது தொடர்பான இந்திய தொழில்துறைகளின் கவலைகள் இந்த ஒப்பந்தத்தில் நிவர்த்தி செய்யப்பட்டதா?**

**பதில்:** ஆம், UAE ஒரு முக்கிய வர்த்தக மையமாக இருப்பதால், பிற நாடுகள் அதன் மூலமாக தாங்கள் குவித்துள்ள பொருட்களை UAE வழியாக அனுப்புவது குறித்த கவலைகள் இதில் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன. இந்த நோக்கத்திற்காகவே, இரு நாடுகளுக்கும் இடையே ஒரு ஆலோசனை இயக்கமுறையானது, இந்த ஒப்பந்தத்தின் குவியல் எதிர்ப்பு விதிகளில் ஏற்படுத்தப்பட்டு உள்ளது. இவ்வாறு குவிக்கப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் மூன்றாம் நாடுகள், இந்தியாவின் பொருட்கள் குவிப்பு எதிர்ப்பு நடவடிக்கைகளில் இருந்து தப்பிக்க இயலாது என்பதை இது உறுதி செய்யும்.

*****



# <u>இந்தியா ஆஸ்திரேலியா</u>

# பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தம் (ECTA)

## அடிக்கடி கேட்கப்பட்டும் கேள்விகள்

## கேள்வி 1: இந்தியாவிற்கும் ஆஸ்திரேலியாவிற்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகம் என்பது என்ன?

**பதில்:** ஆஸ்திரேலியா இந்தியாவின் 17வது பெரிய வர்த்தக கூட்டாளியாகவும், இந்தியா ஆஸ்திரேலியாவின் 9வது பெரிய வர்த்தகக் கூட்டாளியாகவும் உள்ளது. 2021ஆம் ஆண்டில் இந்தியா-ஆஸ்திரேலியா இருதரப்பு வர்த்தகமானது, வர்த்தகம் மற்றும் சேவைகள் வர்த்தகம் ஆகியவற்றில் 27.5 பில்லியன் அமெரிக்க டாலர்கள் என மதிப்பிடப்படுகிறது. இது கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது:

**இருதரப்பு வர்த்தகம்**

| வர்த்தகம் (யுஎஸ் $ பில்லியன்) | பொருட்கள்* | சேவைகள்** | மொத்தம் |
|---|---|---|---|
| ஆஸ்திரேலியாவுக்கு இந்தியாவின் ஏற்றுமதி | 6.9 | 3.6 | 10.5 |
| ஆஸ்திரேலியாவில் இருந்து இந்தியாவின் இறக்குமதி | 15.1 | 1.9 | 17.0 |
| மொத்தம் | 22.0 | 5.5 | 27.5 |
| பற்றாக்குறை (-) / உபரி(+) | -8.2 | **+1.7** | -6.5 |
| ***DGCI&S, **2021 சேவைகளுக்கான ஆர்பிஐ தரவு மதிப்பிடப்பட்டுள்ளது*** | | | |

- 2019 மற்றும் 2021க்கு இடையில் ஆஸ்திரேலியாவிற்கான இந்தியாவின் சரக்கு ஏற்றுமதி 135% வளர்ச்சி அடைந்துள்ளது. இந்தியாவின் ஏற்றுமதி முக்கியமாக பெட்ரோலியப் பொருட்கள், ஜவுளி மற்றும் ஆடைகள் போன்ற செய்து முடிக்கப்பட்ட பொருட்களின் பரந்த அடிப்படையிலான கூடையைக் கொண்டுள்ளது. என்ஜினியரிங் பொருட்கள், தோல் பொருட்கள், இரசாயனங்கள். இரத்தினங்கள் மற்றும் நகைகள் போன்றவை.
- ஆஸ்திரேலியாவில் இருந்து இந்தியாவின் சரக்கு இறக்குமதி மூலப்பொருட்கள், கனிமங்கள் மற்றும் இடைநிலைப் பொருட்களை உள்ளடக்கியது. ஆஸ்திரேலியாவில் இருந்து இந்தியாவின் இறக்குமதியில் 3/4 பங்கு நிலக்கரி ஆகும், அதில் 70% நிலக்கரியில் கோக்கிங் நிலக்கரி ஆகும்.
- இரண்டு பொருளாதாரங்களின் அளவைக் கருத்தில்கொண்டு, இந்தியா-ஆஸ்திரேலியா வர்த்தகத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்திற்கான வாய்ப்பு உள்ளது.

## இருதரப்பு வணிகப் பொருள் வர்த்தக விவரம்

**ஆஸ்திரேலியாவில் இருந்து 96% இறக்குமதி மூலப்பொருட்கள் மற்றும் இடைநிலைப் பொருட்கள்**

| ஆஸ்திரேலியாவில் இருந்து இந்தியாவின் இறக்குமதி | ஆஸ்திரேலியாவுக்கு இந்தியாவின் ஏற்றுமதி |
|---|---|
|  |  |

**கேள்வி 2:** இந்தியா-ஆஸ்திரேலியா பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தத்தின் **(IndAus ECTA)** முக்கிய அம்சங்கள் என்ன?

**பதில்:** ஒரு தசாப்தத்துக்கும் மேலாக ஒரு வளர்ந்த நாட்டுடனான இந்தியாவின் முதல் வர்த்தக ஒப்பந்தம் இதுவாகும்.

இந்தியா-ஆஸ்திரேலியா ECTA-இன் முக்கிய அம்சங்கள்:

**பொருட்கள்**

- இந்தியாவின் ஆர்வமுள்ள பெரும்பாலான பொருட்களுக்கு ஆஸ்திரேலியா 4-5% இறக்குமதி வரியைக் கொண்டுள்ளது.

- இது இந்தியாவின் முதல் வர்த்தக ஒப்பந்தம் ஆகும், அதன் கூட்டாளி நாடு 100% கட்டணத்தை நீக்குகிறது. இந்த ஒப்பந்தத்தின் கீழ், ஆஸ்திரேலியா தனது 100% கட்டண விகிதங்களுக்கு இரண்டு வகைகளில் இந்தியாவிற்கு பூஜ்ஜிய வரி அணுகலை வழங்கும்.

  (i) நமது ஏற்றுமதியின் மதிப்பில் 96.4% தொகையான 98% கட்டண விகிதங்களுக்கு உடனடியாக பூஜ்ஜிய வரி விதிக்கப்படுகிறது. அந்த வரி விகிதங்களுக்கு, ஒப்பந்தம் அமலுக்கு வந்த முதல் நாளிலிருந்தே இந்திய ஏற்றுமதிகளுக்கு உடனடி சந்தை அணுகல் ; பூஜ்ஜிய வரி கிடைக்கும். தற்போது ஆஸ்திரேலியாவால் 4-5% இறக்குமதி வரிக்கு உட்பட்டுள்ள பின்வரும் தொழிலாளர் சார்ந்த துறைகளில் ஏற்றுமதிகள் உடனடி வரியில்லா அணுகல் மூலம் ஆதாயம் பெறும்.

  (ii) மீதமுள்ள 113 கட்டண விகிதங்களின் மீதான வரியை பூஜ்ஜியமாகக் குறைக்கிறது, இது 2% கட்டண விகிதங்களைக் கொண்டுள்ளது மற்றும் 5 ஆண்டுகளில் இந்தியாவின் ஏற்றுமதியில் (மதிப்பு அடிப்படையில்) 3.6% ஆகும், இது மீதமுள்ள பொருட்களுக்கு பயனளிக்கும்.

- <u>ஆஸ்திரேலியாவின் ஏற்றுமதி ஆர்வத்தின் பொருட்களுக்கு,</u> இந்தியா பெரும்பாலும் மூலப்பொருட்கள் மற்றும் இடைநிலைகளில் கட்டண நீக்கம், கட்டணக் குறைப்பு (TR) போன்றவற்றில் கட்டண-விகித ஒதுக்கீட்டுடன் அல்லது இல்லாமல் (TRQ) சலுகைகளை வழங்குகிறது.

  (i) ஆரஞ்சு, மாண்டரின், பாதாம், பேரிக்காய், பருத்தி போன்ற சில விவசாயப் பொருட்கள் மட்டுமே வரையறுக்கப்பட்ட ஒதுக்கீட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளன.

(ii) 3, 5, 7 மற்றும் 10 ஆண்டுகளில் இந்தியா அதன் 40% கட்டண விகிதங்களுக்கு உடனடியாக பூஜ்ஜிய வரி அணுகலை வழங்கும், மீதமுள்ள 30% கட்டம்கட்டமாக வழங்கும். இதில் 125 கட்டண விகிதங்களும் அடங்கும், அவற்றுள் வரி குறைப்பு இருக்கும், வரி நீக்குதல் இருக்காது.

(iii) இந்தியா எந்தச் சலுகையும் வழங்காமல் பல உணர்வுப்பூர்வமான பொருட்களை விலக்கு பிரிவில் வைத்துள்ளது. இவற்றில் சில பால் மற்றும் பிற பால் பொருட்கள், கொண்டைக்கடலை, வாதுமைக்கொட்டை, பிஸ்தா, கோதுமை, அரிசி, கம்பு, ஆப்பிள், சூரியகாந்தி விதை எண்ணெய், சர்க்கரை, புண்ணாக்கு, தங்கம், வெள்ளி, பிளாட்டினம், நகைகள், இரும்புத்தாது மற்றும் பெரும்பாலான மருத்துவச் சாதனங்கள். இது இந்த ஒப்பந்தத்தில் இந்தியாவுக்கு பெரும் ஆதாயம் ஆகும்.

**தோற்ற விதிகள்**

- இந்த ஒப்பந்தத்தின் கீழ் முன்னுரிமைப் பலனைப் பெற, கூட்டாளர் நாடு வழியாக அனுப்பப்படும் மூன்றாம் தரப்பு பொருட்களைத் தடுக்க, கடுமையான தோற்ற விதிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

- மேலும், பொருட்கள் இந்த ஒப்பந்தத்தின் பலனைப் பெற, இருதரப்பின் பிரதேசத்திலும் கணிசமான அளவு செயலாக்கம் தேவைப்படும்.

- பயன்படுத்தப்படும் முறையின் அடிப்படையில் ஊவுஞு35% அல்லது 45% பொது விதி, 807 பொருட்களுக்கான பிஎஸ்ஆர்கள் (PSRs) மற்றும் முதன்மையாக விவசாயப் பொருட்களைச் சேர்ந்த பல பொருட்களுக்கு முழுமையாகப் பெறப்பட்டது.

**வர்த்தகத் தீர்வுகள்**

- இந்த ஒப்பந்தம், இறக்குமதியின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்தவும், உள்நாட்டுத் தொழிலைப் பாதுகாக்கவும் தற்காலிக நடவடிக்கைகளை விரைவாகப் பயன்படுத்துவதற்கான இயக்குமுறையை வழங்குகிறது.

- கட்டணத்தை நீக்குதல் அல்லது கட்டணக் குறைப்பு முடிந்த நாளிலிருந்து 14 ஆண்டுகளுக்குப் பாதுகாப்பு இயக்குமுறை இருக்கும்.

## சேவைகள்

- சேவைகளில் சந்தை அணுகலில், ஆஸ்திரேலியாவில் இருந்து பரந்த மற்றும் ஆழ்ந்த உறுதிப்பாடு அனைத்து துறைகளிலும் விநியோக முறைகளிலும் எடுக்கப்பட்டுள்ளன.

- ஆஸ்திரேலியா இந்தியாவிற்கு 135 துணைத் துறைகளையும் இந்தியா ஆஸ்திரேலியாவிற்கு 103 துணைத் துறைகளையும் வழங்கியுள்ளது.

- ஐடி, ஐடிஇஎஸ், வர்த்தகம், தொழில்முறை சேவைகள், சுகாதாரம், கல்வி, ஆடியோ-வி்ஷுவல் போன்ற இந்தியாவின் ஆர்வத்தின் முக்கிய பகுதிகள் இந்த ஒப்பந்தத்தின் கீழ் ஆஸ்திரேலியாவால் உறுதிசெய்யப்பட்டுள்ளன.

- ஆஸ்திரேலியா இந்திய மாணவர்களுக்கு 4 ஆண்டுகள் வரை படிப்புக்கு பிந்தைய பணி விசா வழங்கும் இந்திய சமையல்காரர்கள் மற்றும் யோகா பயிற்றுனர்களுக்கு ஆண்டுக்கு 1800 ஒதுக்கீடு, இளம் தொழில் வல்லுநர்களுக்கான வேலை மற்றும் விடுமுறை விசா ஏற்பாடு மற்றும் கார்ப்பரேட் இடமாற்றம் செய்பவர்கள், ஒப்பந்தச் சேவை வழங்குநர்கள், தனியாகச் செயல்படும் நிர்வாகிகள் ஆகியோருக்கு 4 ஆண்டுகள் வரை தற்காலிக நுழைவு மற்றும் தற்காலிக தங்கும் வசதிகள்.

## சச்சரவுக்குத் தீர்வு

- இந்த ஒப்பந்தத்தின் கீழ் உள்ள எந்தவொரு சர்ச்சையும் ஆலோசனைகள் மற்றும் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்கப்படும், அவை தோல்வியுற்றால் அவர்கள் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட நடுவர் குழுவை நாடலாம். சர்ச்சைக்கு உள்ளாகிய ஒவ்வொரு தரப்பினரும் ஒரு உறுப்பினரை நியமிக்க வேண்டும் மற்றும் குழுவின் தலைவராக இருக்கும் மூன்றாவது உறுப்பினர் பரஸ்பர உடன்பாட்டின் மூலம் நியமிக்கப்படுவார்.

## மதிப்பாய்வு ஏற்பாடு

- பொது மதிப்பாய்வுப் பிரிவைத் தவிர, முதன்முறையாக,இந்த ஒப்பந்தத்தின் சில அம்சங்களுக்காக 15 ஆண்டுகளுக்குப் பிறகு கட்டாய மதிப்பாய்வுக்கான சிறப்பு மதிப்பாய்வு இயக்குமுறைக்கான புதிய உட்பிரிவு விதி அறிமுகப்படுத்தப்பட்டது. மதிப்பாய்வு கோரப்பட்டால், அது கட்டாயமானது மற்றும் 6 மாதங்களுக்குள் முடிக்கப்பட வேண்டும்.

**கேள்வி 3: இந்த ஒப்பந்தத்தின் கீழ் எதிர்பார்க்கப்படும் ஒட்டுமொத்த நன்மைகள் என்ன?**

**பதில்:** இந்த ஒப்பந்தத்தின் கீழ் எதிர்பார்க்கப்படும் ஒட்டுமொத்த நன்மைகள் வருமாறு:

- இவ்விரு நாடுகளுக்குமான பொருட்கள் மற்றும் சேவைகளின் இருதரப்பு வர்த்தகம் தற்போதுள்ள 27.5 பில்லியன் அமெரிக்க டாலர்களில் இருந்து 5 ஆண்டுகளில் 45-50 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- இந்தியப் பொருட்கள் மற்றும் சேவைகளின் சந்தைப் பங்குகளின் ஒருங்கிணைப்பு மற்றும் வளர்ச்சி மற்றும் இந்தியாவின் பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி 2021-இல் 10.5 பில்லியன் அமெரிக்க டாலர்களில் இருந்து 2026-27-இல் 20 பில்லியன் அமெரிக்க டாலர்களாகவும், 2035-இல் 35 பில்லியன் அமெரிக்க டாலர்களைத் தாண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

- என்ஜினீயரிங், ஜவுளி மற்றும் ஆடைகள்,இரத்தினங்கள் மற்றும் நகைகள், தோல் மற்றும் காலணிகள் போன்ற தொழிலாளர் சார்ந்த துறைகளில் இருந்து ஏற்றுமதியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுகிறது. மற்றபடி ஆஸ்திரேலியாவில் 4-5% கட்டணத்தால் பாதிக்கப்படும் போட்டியாளர்களுக்கு எதிராக ஆஸ்திரேலியா சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களைக் கொண்டுள்ளது (சீனா, தாய்லாந்து, வியட்நாம், தென்கொரியா, இந்தோனேசியா, மலேசியா, ஜப்பான் போன்றவை). மேலும், ஆஸ்திரேலிய ஒழுங்குமுறை செயல்முறைகளில் எளிமையாக்குதல் இந்தியாவின் மருந்து ஏற்றுமதியை ஊக்குவிக்கும்.

- அடுத்த 5 முதல் 7 ஆண்டுகளில், அதிக வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கான பங்களிப்பு, சுமார் 10,00,000 (பத்து இலட்சம்) என மதிப்பிடப்பட்டுள்ளது, ஏனெனில் தொழிலாளர் சார்ந்த துறைகள் அதிக இலாபம் ஈட்டக்கூடும்.

- ஆஸ்திரேலியாவில் இந்தியர்களுக்கு வேலைவாய்ப்புகளை அதிகரித்தல், அதன் மூலம் இந்தியாவிற்கு அனுப்பும் பணத்தின் வளர்ச்சிக்கு பங்களித்தல்.

- மேம்பட்ட தொழில்நுட்பத்தின் (என்ஜினீயரிங், எலக்ட்ரானிக்ஸ், மருந்துகள் மற்றும் மருத்துவச் சாதனங்கள்) அதிக மதிப்புள்ள தயாரிப்புகளின் அதிகரிப்புடன் மதிப்புச் சங்கிலியில் செங்குத்து இயக்கத்தை மேம்படுத்துதல் மற்றும்

- மலிவான மூலப்பொருட்களுக்கான அணுகல் எ.்.கு, அலுமினியம்,ஜவுளி மற்றும் ஆடைகள் போன்ற தொழில்களை போட்டித்தன்மை வாய்ந்ததாக மாற்றும்.

**கேள்விகள் 4: இந்திய ஆஸ்திரேலிய ECTA-வில் (ECTA) உள்ள வெவ்வேறு அத்தியாயங்கள் யாவை?**

**பதில்:** ஆரம்ப ஏற்பாடுகள் மற்றும் பொது வரையறைகள், சரக்குகளில் வர்த்தகம், வர்த்தகத் தீர்வுகள், தோற்ற விதிகள், சுங்க நடைமுறைகள் மற்றும் வர்த்தக வசதிகள்,துப்புரவு மற்றும் தாவரநல நடவடிக்கைகள், வர்த்தகத்திற்கான தொழில்நுட்ப தடைகள், இயல்பாளிகளின் இடப்பெயர்ச்சி, வெளிப்படைத்தன்மை, பொது விதிகள் மற்றும் விதிவிலக்குகள், நிர்வாக மற்றும் நிறுவன விதிகள், சச்சரவுக்குத் தீர்வு மற்றும் இறுதி விதிகள் ஆகிய வணிகம் தொடர்பான 14 அத்தியாயங்களை ECTA (ECTA) கொண்டுள்ளது. கூடுதலாக, ஒப்பந்தத்தின் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய பல “பக்க கடிதங்கள்” உள்ளன, அதில் இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் மேலும் உறுதிமொழிகளை அளித்துள்ளன.

**கேள்விகள் 5: சரக்கு வர்த்தகத்தில் இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் ஒருவருக்கொருவர் வழங்கும் கட்டணச் சலுகைகள் என்ன?**

**பதில்:** ஆஸ்திரேலியாவுக்கான இந்திய ஏற்றுமதிகள் முதன்மையாக நுகர்வோர் மற்றும் உற்பத்திப் பொருட்களைக் கொண்டுள்ளது. அப்பொருட்களுக்கான முக்கிய ஆதாயங்கள் ஆஸ்திரேலிய தரப்பின் கட்டண தாராளமயமாக்கலின் அடிப்படையில் இருக்கும், ஆஸ்திரேலியாவில் மருந்துபொருட்களுக்கான விரைவான அனுமதி வழங்குதல் இதற்கு உதவுகிறது.

- இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யும் **100மூ கட்டண விகிதங்களுக்கு ஆஸ்திரேலியா பூஜ்ஜிய வரி அணுகலை** வழங்குகிறது:

(அ) நமது ஏற்றுமதியின் 96.4மூ மதிப்பில் உடனடியாக பூஜ்ஜிய வரி (கட்டண விகிதங்களுக்கு 98மூ) அதாவது, இந்த கட்டண விகிதங்களுக்கு,; பூஜ்ஜிய வரி ஒப்பந்தம் அமலுக்கு வந்த முதல் நாளிலிருந்து இந்திய ஏற்றுமதிக்கு உடனடி சந்தை அணுகல். தற்போது ஆஸ்திரேலியாவால் 4-5% இறக்குமதி வரிக்கு உட்பட்டுள்ள பின்வரும் தொழிலாளர் சார்ந்த துறைகளில் ஏற்றுமதிகள் உடனடி வரியில்லா அணுகல் மூலம் ஆதாயம் பெறும்:

(i) பெரும்பாலான ஜவுளி மற்றும் ஆடைகள்

(ii) சில விவசாய மற்றும் மீன் பொருட்கள்

(iii) தோல், காலணி, மரச்சாமான்கள் மற்றும் விளையாட்டுப் பொருட்கள்

(iv) நகைகள்

(v) இயந்திரங்கள், மின்சாரப் பொருட்கள், இரயில்வே வேகன்கள் போன்றவை.

(vi) தேர்ந்தெடுக்கப்பட்ட மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவச் சாதனங்கள்

(vii) தளபாடங்கள், முதலியன

b) **ஆஸ்திரேலியாவின் 1.7% கட்டண விகிதங்களை உள்ளடக்கிய** மீதமுள்ள 113 கட்டண விகிதங்களின் மீதான பூஜ்ஜிய வரியை படிப்படியாக நீக்குதல் மற்றும் 5 ஆண்டுகளில் இந்தியாவின் ஏற்றுமதியில் (மதிப்பு அடிப்படையில்) 3.6 ஆகும், இது மீதமுள்ள தயாரிப்புகளுக்கு பயனளிக்கும்.

- மேலும், ஆஸ்திரேலிய ஏற்றுமதி மூலப்பொருட்கள் மற்றும் இடைநிலைப் பொருட்களில் அதிகக் கவனம் செலுத்துவதால், இந்தியாவில் உள்ள பல தொழில்கள் **மலிவான மூலப்பொருட்களைப்** பெற்று, குறிப்பாக எ.ஃ.கு, அலுமினியம், துணி.ஃ.ஆடைகள்**போன்ற துறைகளுக்கு போட்டித்தன்மையுடன் இருக்கும்.**

**கேள்வி 6: இந்தியஆஸ்திரேலியா ECTA-வில் (IndAus ECTA) இந்தியாவின் விலக்கு பட்டியலில் உள்ள பொருட்களின் முக்கியமான பிரிவுகள் யாவை?**

**பதில்:** இந்தியா தனது 29.8% கட்டண விகிதங்களை விலக்கு பட்டியலின் கீழ் வைத்துள்ளது, இதில் முதன்மையாக பின்வருவன அடங்கும்:

- பால் மற்றும் பிற பால் பொருட்கள்
- கொண்டைக்கடலை
- வாதுமைக்கொட்டை
- பிஸ்தா கொட்டை
- நிலக்கடலை
- கோதுமை, அரிசி, கம்பு
- ஆப்பிள்
- சூரியகாந்தி விதை எண்ணெய்
- சர்க்கரை
- புண்ணாக்கு
- தங்கம், வெள்ளி, பிளாட்டினம், நகைகள்
- இரும்புத்தாது
- பெரும்பாலான மருத்துவச் சாதனங்கள் போன்றவை.

இது தவிர, பின்வரும் விவசாயப் பொருட்களுக்கு கட்டண விகித ஒதுக்கீடு (TRQ) வழங்கப்பட்டுள்ளது:

- ஆரஞ்சு மற்றும் மாண்டரின் — ஒரு கூட்டு கட்டண விகித ஒதுக்கீடு (TRQ) சுமார் 13,700 மெட்ரிக் டன் ; 50% பொருந்தக்கூடிய வரி.
- பருத்தி - 28 மிமீ மற்றும் அதற்கு மேல், இஎல்எஸ் (ELS) வகைகளுக்கு, 3 இலட்சம் பேல்கள் (51,000 மெட்ரிக் டன்களுக்கு சமம்) கட்டண விகித ஒதுக்கீடு (TRQ) பூஜ்ஜிய வரியில் வழங்கப்படுகிறது.
- பருப்பு- ஒரு ஆண்டிற்கு 1.5 இலட்சம் டன்கள் கட்டண விகித ஒதுக்கீடு (TRQ); 50% வரி பொருந்தும்.
- பேரிக்காய் - ஆண்டு கட்டண விகித ஒதுக்கீடு (TRQ) 3,700 மெட்ரிக் டன் ; 50% எம்எ.்.ப்என் (MFN) வரி.
- ஓட்டுடன் கூடிய மற்றும் ஓடு நீக்கப்பட்ட பாதாம் கொட்டைகள் - ஒருங்கிணைந்த ஆண்டு கட்டண விகித ஒதுக்கீடு (TRQ) 34,000 டன் ;50% எம்எ.்.ப்என் (MFN) வரி.

**கேள்வி 7: இந்த ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவிற்கான அதன் வணிகப் பொருட்களுக்கான ஏற்றுமதி வாய்ப்புகள் என்ன?**

**பதில்:** தற்போது, ஆஸ்திரேலியாவின் மற்ற FTA(FTA) கூட்டாளிகளுடன் ஒப்பிட்டால், இந்தியாவில் இருந்து அதிக எண்ணிக்கையிலான ஏற்றுமதிப் பொருட்கள், குறிப்பாக தொழிலாளர் சார்ந்த துறைகளில் இருந்து ஆஸ்திரேலியாவிற்கு ஏற்றுமதி செய்யும்போது, 4-5% வரி பாதகமாக உள்ளது.

செய்யும்போது, 4-5% வரி பாதகமாக உள்ளது.

| வரிக்குட்பட்ட ஏற்றுமதிப் பொருட்களின் பங்கு | | | | |
|---|---|---|---|---|
| வ.எண். | துறை | இந்தியாவின் உலக ஏற்றுமதி (யுஎஸ் டாலர் மில்லியன்) | ஆஸ்திரேலியாவிற்கு இந்தியாவின் ஏற்றுமதி (யுஎஸ் டாலர் மில்லியன்) | மொத்தத்தில் வரிக்குரிய ஏற்றுமதியின் பங்கு (%) |
| 1 | கனிமங்கள் மற்றும் உலோகங்கள் | 97,249 | 890 | 62.6% |
| 2 | இரசாயனங்கள் | 63,694 | 682 | 21.7% |
| 3 | ஜவுளி | 23,835 | 333 | 70.2% |
| 4 | ஆடை | 15,205 | 273 | 97.1% |
| 5 | போக்குவரத்து உபகரணங்கள் | 24,712 | 261 | 88.4% |
| 6 | மின்சாரம் அல்லாத இயந்திரங்கள் | 24,307 | 239 | 81.2% |
| 7 | மின் இயந்திரங்கள் | 18,426 | 191 | 47.3% |
| 8 | தோல், காலணி போன்றவை | 9,373 | 179 | 94.1% |
| 9 | தானியங்கள் மற்றும் தயார்ப்படுத்தல்கள் | 14,397 | 124 | 32.4% |

**துறை சார்ந்த ஆதாயங்கள்:** சில துறைகளுக்கான சாத்தியமான ஆதாயங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

1. **மருந்துகள் துறை**

- ஆஸ்திரேலியா மருந்துப் பொருட்களின் சந்தை அளவு தற்போது $12 பில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- தற்போதைய இந்திய ஏற்றுமதி ~345 மில்லியன் யுஎஸ் டாலர் குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கான வாய்ப்பு.
- **இணைப்பிலுள்ள மருந்துப் பொருட்களுக்கு** ஆஸ்திரேலியா ஒப்புக்கொண்டது. பின்வருபவை குறிப்பிடத்தக்க ஆதாயங்கள்:-

    a) ஒப்பிடக்கூடிய வெளிநாட்டு ஒழுங்குமுறை வழியைப் பயன்படுத்தி காப்புரிமை பெற்ற, பொதுவான மற்றும் உயிரியை ஒத்த மருந்துகளுக்கு விரைவான அனுமதி.

    b) அதேபோன்று உற்பத்தி வசதிகளின் விரைவான தர மதிப்பீடு/சோதனைகள்.

- இது ஐரோப்பிய ஒன்றியம்/ கனடா FTA அனுமதிகளைக் கொண்ட அனைத்து இந்திய அலகுகள்/மருந்துகளுக்கு பயனளிக்கும். இது இந்தியாவிற்கு ஒரு முக்கிய திருப்புமுனையாகும். இதை எதிர்கால FTA-களில் பயன்படுத்தலாம்.

2. **ஜவுளி**

- ஆஸ்திரேலிய சந்தை பின்வரும் இந்திய ஏற்றுமதிகளுக்கு நல்ல வாய்ப்பை அளிக்கிறது:

    a. **வீட்டுப் பயன்பாட்டு ஜவுளிகளான**, படுக்கை மற்றும் குளியல் லினன், கழிப்பறை மற்றும் சமையலறை லினன், ஸ்கிரீன் துணிகள், தலையணை உறைகள், மெத்தைகள் மற்றும் பல்வேறு நார்மெத்தை விரிப்புகள், காட்டன் பைகள் போன்றவை.

    b. **ரெடிமேடு ஆடைகள்**

    c. **தரைவிரிப்புகள் மற்றும் ஃபுளோரிங்ஸ்**

- தற்போது இந்தியாவின் ஜவுளி மற்றும் ஆடை ஏற்றுமதி 2020-21-இல் 392 மில்லியன் அமெரிக்க டாலர்களாக உள்ளது, இது 2021-22-இல் 508 மில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டும், இது 29% வளர்ச்சி ஆகும்.

- இந்தியாவின் 70% ஜவுளிப் பொருட்கள் மற்றும் 90% ஆடை தயாரிப்புகள் ஆஸ்திரேலியாவிற்கு ஏற்றுமதி செய்ய சுங்கவரியை செலுத்துகின்றன. சீனா, வியட்நாம்,வங்காளதேசம் போன்ற ஆஸ்திரேலியா உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களுடன் (FTAs) போட்டியாளர்களுக்கு எதிராக இந்தத் துறைகளில் நமது ஏற்றுமதிக்கு 5% கட்டணம் செலுத்துவதால் பாதிப்புக்கு உள்ளாகிறது.

- இப்போது இந்த வரி நீக்கம் மூலம், இந்தியாவின் ஏற்றுமதி ஜவுளி மற்றும் ஆடைகள் அடுத்த 3 ஆண்டுகளில் 392 மில்லியன் அமெரிக்க டாலர்களில் இருந்து 1100 மில்லியன் அமெரிக்க டாலர்கள் வரை இலாபம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- ஏற்றுமதி மற்றும் மறுமுதலீடு காரணமாக கூடுதல் திறன் உருவாக்கம், ஆண்டுக்கு 40,000 பேருக்கு கூடுதல் வேலைவாய்ப்பை உருவாக்க வாய்ப்புள்ளது.

- மேலும், பல புதிய மேட்-அப் உற்பத்தி அலகுகள் அடுக்கு 2 ரூ அடுக்கு 3 நகரங்கள் மற்றும் கிராமப்புறம் ஆகிய பகுதிகளில் ஒரு தொழில்துறை சூழல் அமைப்பை உருவாக்கி வேலைவாய்ப்பை உருவாக்கும்.

### 3. என்ஜினீயரிங் தயாரிப்புகள்

- ஆஸ்திரேலியாவிற்கான இந்தியாவின் என்ஜினீயரிங் பொருட்கள் ஏற்றுமதி 2020-21-இல் 801 மில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது, இது 2021-22ஆம் ஆண்டில் 1215 மில்லியன் அமெரிக்க டாலர்களாக இருக்கும், இதன் மூலம் வளர்ச்சி 51% ஆக இருக்கும்.

- தற்போது, ஆஸ்திரேலியாவுக்கான நமது பெரும்பாலான என்ஜினீயரிங் பொருட்கள் ஏற்றுமதி 5% வரிக் கட்டணக் குறைபாடுகளால் பாதிக்கப்படுகின்றன. இந்த பொருட்களில் தட்டையான மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட இரும்பு மற்றும் எஃகு பொருட்கள் அடங்கும். அறிவியல் மற்றும் மருத்துவக் கருவிகள், பாகங்கள், போக்குவரத்து உபகரணங்கள், மின்சாரம் அல்லாத மற்றும் மின்சார இயந்திரங்கள் போன்றவை.

- இக்கட்டணங்கள் நீக்கப்பட்டதன் மூலம், என்ஜினீயரிங் பொருட்களின் ஏற்றுமதி ஆண்டுக்கு சுமார் 15% வளர்ச்சியை எட்டும், 5 ஆண்டுகளில் சுமார் 1.5 பில்லியன் அதிகரித்து 2026-27க்குள் 2.7 பில்லியனை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### 4. இரத்தினங்கள் மற்றும் ஆபரணங்கள்

- 2020-21ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவிற்கான இந்தியாவின் இரத்தினங்கள் மற்றும் ஆபரணங்கள் ஏற்றுமதி 275 மில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது, இது 2021-22ஆம் ஆண்டில் 347 மில்லியன் அமெரிக்க டாலர்களாக இருக்கும், இதன் மூலம் 26% வளர்ச்சியைப் பெறும்.
- ஆபரணப் பொருட்களுக்கான வரி நீக்கப்பட்டதன் மூலம், ஆஸ்திரேலியாவில் 5% வரி தாக்கத்தால் பாதிக்கப்பட்ட ஆபரணங்களின் ஏற்றுமதி இப்போது அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

### 5. தோல் மற்றும் காலணிகள்

- ஆஸ்திரேலியாவுக்கான இந்தியாவின் தோல் மற்றும் காலணிகள் ஏற்றுமதி 2020-21ஆம் ஆண்டில் 62.2 மில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது, இது 2021-22ஆம் ஆண்டில் 71.6 மில்லியன் அமெரிக்க டாலர்களாக இருக்கும், இதன் மூலம் வளர்ச்சி 15% ஆக இருக்கும்.
- ஆஸ்திரேலியாவுக்கான இந்தியாவின் தோல் பொருட்கள் 5% வரி பாதிப்பால், ஏற்றுமதியில் சுமார் 94% பாதிக்கப்பட்டது.
- இந்த வரி நீக்கப்பட்டதன் மூலம், இந்திய ஏற்றுமதி மேலும் வளர்ச்சி பெற்று, அடுத்த 2 ஆண்டுகளில் 100 மில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டும்.

## சேவைகள்

**கேள்விகள் 8: சேவைத் துறையில் சாத்தியமான ஆதாயங்கள் என்ன?**

**பதில்:** சேவைகள் வர்த்தகத்தில் சாத்தியமான ஆதாயம்:

இந்தியத் தகவல் மற்றும் தகவல்தொடர்பு தொழில்நுட்ப (ICT) வல்லுநர்கள் உட்பட அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் அல்லது கணிதம் (STEM) ஆகிய துறைகளைச் சார்ந்த வல்லுநர்களின் முக்கியப் பங்களிப்பை ஆஸ்திரேலியா அங்கீகரித்துள்ளது. இந்தத் துறைகளில் இயக்கத்தை மேம்படுத்த, ஐசிடி துறைகள் உட்பட ஸ்டெம் (STEM) துறைகளில் பட்டப்படிப்புகளுடன் முதல் வகுப்பு ஆனர்ஸுடன் ஆஸ்திரேலியாவில் பட்டம் பெறும் இந்திய மாணவர்களுக்கு இரண்டு முதல் மூன்று ஆண்டுகள் வரை தங்குவதற்கான வாய்ப்பை ஆஸ்திரேலியா நீட்டிக்கும்.

## 1. பரஸ்பர புரிந்துணர்தல் ஒப்பந்தம் (MRAs)

- தொழில்முறை சேவைகள் மற்றும் வேறு உரிமம் பெற்ற/ஒழுங்கு படுத்தப்பட்ட பணிகளில் பரஸ்பர புரிந்துணர்தலை மேற்கொள்ளத் தேவையான விவரமான வகைமுறைகள் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளன. இவை சேவைகள் அத்தியாயத்தில் தொழில்முறை சேவைகளின் பிற்சேர்க்கைகளாகவும், வணிகத்தோடு இணைக்கப்பட்டும் உள்ளன.
- குறிப்பாக சிங்கப்பூர், ஜப்பான் மற்றும் கொரியாவுடனான இந்தியாவின் முந்தைய கட்டற்ற வர்த்தக ஒப்பந்தங்களோடு,ஒப்பிடும்போது, இந்தக் கடப்பாடுகள் இன்னும் அதிகமான விரிவாக உள்ளன மேலும் அனைத்து உரிமங்கள் மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட பணிகள் போன்றவை அடங்கிய கூறுகளைக் கொண்டுள்ளன, எங்கெல்லாம் முடியுமோ அங்கு திட்டவரையறை கொண்ட தற்காலிக உரிமங்கள் வழங்குதல் மற்றும் இது சம்பந்தப்பட்ட கடப்பாடுகளை பின்பற்றுவதற்கான ஒரு பணிக்குழுவின் இயக்க முறையை நிறுவுதல் போன்றவையும் உட்கொண்டுள்ளன.
- இந்தியா மற்றும் ஆஸ்திரேலியாவின் தொழில்முறை அமைப்புகளுக்கிடையே செவிலிப் பணி, கட்டிடக் கலை மற்றும் பிற தொழில்முறை சேவைகளுக்கான பரஸ்பர புரிந்துணர்தல் ஒப்பந்தங்கள் (MRAs) மீது பேச்சுவார்த்தை தொடங்கவும் இது வழி செய்யும். அதன் மூலம் இரு சாராருக்கிடையே தொழில்முறை செயலாளர்களின் போக்குவரத்துக்கு இது வழி செய்யும்.

## 2. இரட்டை வரிவிதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தம் (DTAA)

- ஆஸ்திரேலியாவுக்கு தொழில்நுட்ப சேவைகள் அளிக்கும் இந்திய நிறுவனங்களின் அக்கரை வருமானத்துக்கான வரிவிதிப்பை நிறுத்துவதற்காக ஆஸ்திரேலியாவின் உள்நாட்டு வரிவிதிப்பு சட்டத்தை திருத்த ஆஸ்திரேலிய அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது. இரட்டை வரிவிதிப்பைத் தவிர்க்கவும் வருமானத்தின் மேல் விதிக்கப்படும் வரிகளை கட்டாமல் ஏய்ப்பதை தடுக்கவும் இந்திய குடியரசு மற்றும் ஆஸ்திரேலிய அரசு இவை இரண்டிற்கும் இடையே உள்ள இரட்டை வரிவிதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தம் குறித்து இந்திய அரசு எழுப்பிய பிரச்சினைக்கு இது முடிவு காணும்.
- இது இந்திய ஐடி தொழில்துறையின் வெகு காலமாக நிலுவையில் உள்ள கோரிக்கை. திருத்தம் நிகழ்ந்தவுடன், இந்திய தொழில்நுட்ப நிறுவனங்கள் ஆஸ்திரேலியாவில் ஈட்டப்படும் அக்கரை வருமானங்களுக்கு வரி செலுத்த தேவை இருக்காது, அதன்மூலம் சர்வதேச சந்தையில் அவர்களது போட்டித் தன்மையை அதிகரிக்கலாம்.

### 3. துறைவாரியான பலன்கள்

- வணிக வாய்ப்பு கொண்ட சந்தை அணுகல், தேசியக் கையாளுகை, உள்ளூர் இருப்பு, கணினி சம்பந்தப்பட்ட சேவைகள், சட்ட சேவைகள்,கணக்கியல், வரிவிதிப்பு, கட்டிட சேவைகள், பொறியியல், ஒருங்கிணைக்கப்பட்ட பொறியியல் நகர்ப்புறத் திட்டம் மற்றும் நில அமைப்பு கட்டிட சேவைகள், மருத்துவம், பல் மருத்துவம் மற்றும் கால்நடை மருத்துவ சேவைகள், மகப்பேறு உதவியாளர், செவிலியர் போன்றவரால் அளிக்கப்படும் சேவைகள், கணினி சார்ந்த சேவைகள், கேட்பொலி காணொளி சேவைகள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுச் சேவைகள், மற்ற வணிக சேவைகள், தகவல் தொடர்பு, கட்டுமானம், விநியோகம், கல்வி, சுற்றுச்சூழல், நிதிசார்பு, சுற்றுலா மற்றும் பயம் சார்ந்த கேளிக்கை, போக்குவரத்து சேவைகள் போன்றவை மற்றும் சில இணங்காப் பயன்பாடு கொண்ட நடவடிக்கைகள் போன்ற கிட்டத்தட்ட அனைத்து துணைத் துறைகளிலும் மிகத் தனிச் சலுகைக்குரிய நாடு என்று ஆஸ்திரேலியாவில்
- உகந்த வணிக சூழ்நிலையை உருவாக்குவதற்கும் மேலாக, சேவைகளின் வாக்குறுதிகள் ஒரு நிச்சயத்தன்மை, முன்னறிவுத் தன்மை மற்றும் ஒளிவின்மையை நமது சேவை வழங்குனருக்கு அளிக்கின்றன.

### 4. இடம்பெயர் ஆற்றல் பயன்கள்

- பெரு நிறுவனங்களுக்கிடையே மாற்றப்படுபவர்கள், ஒப்பந்த சேவை வழங்குனர்கள் மற்றும் தற்சார்புடைய செயல் அலுவலர்களுக்கான உயர்தர தற்காலிக நுழைவு மற்றும் தற்காலிக தங்கல்வாக்குறுதிகள் (4 வருடங்கள் வரை). இது தவிர, வணிகமுறை வருகையாளர்கள் மற்றும் நிறுவுபவர்கள் மற்றும் சேவை வழங்குபவர்களுக்கான வாக்குறுதிகளும் மேற்கொள்ளப் படுகின்றன.
- **வாழ்க்கைத் துணைகள் மற்றும் அண்டியிருப்பவர்களுக்கு நுழைவு, தங்கல் மற்றும் வேலை செய்ய உரிமைகளுக்கான வாக்குறுதிகள்.** பெரு நிறுவனங்களுக்கிடையே மாற்றப்படுபவர்கள், ஒப்பந்த சேவை வழங்குனர்கள் மற்றும் தற்சார்புடைய செயல் அலுவலர்களுக்கான வகைகளுக்குக் கீழ் 12 மாதங்கள் வரை அல்லது அதற்கு அதிகமாக தற்காலிக நுழைவு மற்றும் தற்காலிக தங்கல் அல்லது தற்காலிக தங்கல் நீட்டிப்பு அளிக்கப்பட்ட மேலும் ஒரு வாழ்க்கைத்துணை அல்லது அண்டியிருப்பவர் கொண்ட ஒரு இந்தியாவின் இயற்பாளிக்கு, இணையாக வரும் வாழ்க்கைத் துணைக்கோ அல்லது அண்டியிருப்பவருக்கோ நுழைவு, தற்காலிக தங்கல், நடமாட்டம்மேலும் வேலை செய்தல் ஆகியவற்றுக்கான உரிமையை இயற்பாளிக்கு இணையான காலத்துக்கு விண்ணப்பத்தின் பேரில் ஆஸ்திரேலியா வழங்கும்.

**கேள்வி 9: இந்தியா/ ஆஸ்திரேலியாவின் பொருளாதாரத்துக்கு சேவைகள் துறையின் பங்களிப்பு என்ன?**

**பதில்:** பொருளாதாரத்தில் சேவைகள் துறையின் மொத்த மதிப்புக் கூட்டல் (GVA) இந்தியாவில் 54% மற்றும் ஆஸ்திரேலியாவின் GVA-இல் 73% ஆகும்.

**கேள்வி 10:** சேவைகளின் சந்தை அணுகலைப் பொறுத்த வரை, ஆஸ்திரேலியா மற்றும் இந்தியா மேற்கொண்ட வாக்குறுதிகள் எவை மேலும் இரு தரப்புகளுக்கும் உள்ள முக்கிய பயன்கள் எவை?

**பதில்:** இரு நாடுகளும் 11 விரிவான சேவைகள் வகைகளில் வாக்குறுதிகளை மேற்கொண்டுள்ளன. அவற்றில் உள்ளடங்கியவை: 'தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொடர்பு சேவைகள்', 'வணிக சேவைகள்', 'கட்டுமானம் மற்றும் அதன் தொடர்புள்ள பொறியியல் சேவைகள்', 'விநியோக சேவைகள்', 'கல்வித்துறை சேவைகள்', 'சுற்றுச் சூழல் சேவைகள்', 'நிதித்துறை சேவைகள்', 'உடல்நலம் தொடர்புள்ள மற்றும் சமூக சேவைகள்', சுற்றுலா மற்றும் பயணம் தொடர்புள்ள சேவைகள்', 'கேளிக்கை பாரம்பரிய மற்றும் விளையாட்டுத் துறை சேவைகள்' மற்றும் 'போக்குவரத்து சேவைகள்

**இந்தியா மற்றும் ஆஸ்திரேலியாவுக்கான சேவைகளின் முக்கிய பயன்கள்:**

| வ.எண். | இந்தியாவுக்கான முக்கிய பயன்கள் | ஆஸ்திரேலியாவுக்கான முக்கியப் பயன்கள் |
|---|---|---|
| 1. | ஏறக்குறைய அனைத்து துணைத் துறைகளிலும் மிகத் தனிச் சலுகைகளுக்கு உரிய நாடு (MFN) என்ற தகுதியோடு ஏறத்தாழ 135 துணைத் துறைகளில்(GATS-104) ஆஸ்திரேலியா வாக்குறுதி அளித்துள்ளது. | ஏறக்குறைய 103 துணைத்துறைகளில் (GATS-36) மிகத் தனிச் சலுகைகளுக்கு உரிய நாடு (MFN) என்ற தகுதியோடு ஏறத்தாழ 31 துணைத் துறைகளில் இந்தியா வாக்குறுதி அளிக்கிறது |
| 2. | தகவல் தொழில்நுட்பம், தொழில்நுட்பத்தினால் இயங்கும் சேவைகள், வணிகம், தொழில்முறை சேவைகள், உடல்நலன், கல்வி, கேட்பொலி காணொளி போன்ற இந்தியாவின் முக்கியமான ஆர்வங்களுக்கு ஆஸ்திரேலியா வாக்குறுதி கொடுக்கிறது. | வணிக சேவைகள், நிதித்துறை சேவைகள், கல்வி போன்ற ஆஸ்திரேலியாவின் முக்கியமான ஆர்வங்களுக்கு இந்தியா வாக்குறுதி கொடுக்கிறது. பல தளங்களில் முதலீடுகளுக்கு வாய்ப்பு. |
| 3. | ஏறக்குறைய அனைத்துத் துறைகளில் எல்லை தாண்டிய சேவை வழங்கல்களுக்கு உள்ளூர் இருப்புக்கான தேவைகளை திணிக்காதிருக்க ஆஸ்திரேலியா வாக்குறுதி கொடுத்துள்ளது. | எதிர்மறைப் பட்டியல் அணுகுமுறைக்கும் 6 ஆண்டுகளில் இந்தியா மாறும் சேவைத் துறைகளைச் சார்ந்த வணிக நடவடிக்கைகளை எளிதாக்குவதில் நிச்சயத் தன்மை வழங்குவதற்குத் தேவையான உள்நாட்டு சட்ட திட்டங்களுக்கு GATS-ப்ளஸ் வாக்குறுதிகள். |

**கேள்வி 11:** சேவைகளில் ஆஸ்திரேலியாவின் வாக்குறுதிகளின் முக்கியமான அம்சங்கள் யாவை?

**பதில்:** சேவைகளுக்கு ஆஸ்திரேலியா GATS/FTA ப்ளஸ் வாக்குறுதி அளித்திருக்கிறது.

கணினி சார்ந்த சேவைகள், கேட்பொலி காணொளி சேவைகள், மற்ற வணிக சேவைகள், ஆராய்ச்சி ரு மேம்பாடு சேவைகள், கல்விச் சேவைகள், உடல்நலன் சேவைகள், தொழில்முறை சேவைகள் (சட்டத்துறை சேவைகள், கணக்கியல், வரிவிதிப்பு, கட்டிட சேவைகள், பொறியியல், ஒருங்கிணைத பொறியியல், நகர்ப்புற திட்டமிடல் மற்றும் நில அமைப்பு கட்டிட சேவைகள் மருத்துவ, பல் சார்ந்த மற்றும் கால்நடை மருத்துவ சேவைகள் போன்றவை) சுற்றுச் சூழல் சேவைகள், நிதித்துறை சேவைகள், சுற்றுலா & பயணம் சார்ந்த சேவைகள், போக்குவரத்து சேவைகள் போன்றவைஇந்தியாவின் ஆர்வங்களான சேவைத் துறைகள் ஆஸ்திரேலியாவினால் வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கின்றன

- நாடு கடந்த சேவை வழங்குதலுக்காகவும் வணிக இருப்பு மூலமாக வழங்கப்படும் சேவைகளுக்காகவும், வணிக வாய்ப்பு கொண்ட சந்தை அணுகல், வாக்குறுதிகள் ஆஸ்திரேலியாவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன
- இந்திய மாணவர்களுக்கு 4 வருடங்கள் வரை கல்விக்குப் பிறகான வேலை விசா
- பெருநிறுவனங்களுக்கு இடையே மாற்றப்படுபவர்கள், ஒப்பந்த சேவை வழங்குனர்கள் மற்றும் தற்சார்புடைய செயல் அலுவலர்களுக்கான தாராளமான தற்காலிக நுழைவு மற்றும் தற்காலிக தங்கல் வாக்குறுதிகள்(4 வருடங்கள் வரை)
- ஒப்பந்த சேவை வழங்குனர்கள் போல உள்நுழையும் தகுதிபெற்ற, தொழில்முறை இந்திய பாரம்பரிய சமையல் கலைஞர்கள் மற்றும் யோகா பயிற்றுனர்களுக்கு வருடத்துக்கு 1800 எண்ணிக்கை ஒதுக்கீடு.
- இளம் தொழில்முறை வல்லுனர்களுக்கு வேலை மற்றும் விடுமுறை விசா வசதி.

**கேள்வி 12: இந்திய-ஆஸ்திரேலிய CECA-இன் படி, இயற்பாளிகளின் இயக்கம் குறித்தான அத்தியாயத்தில் (MoNP) எந்த எந்த வகைகள் பேசப்படுகின்றன?**

**பதில்:** ஆஸ்திரேலியாவிலிருந்து வரும் வணிக முறை வருகையாளர்கள் (BV), பெரு நிறுவனங்களுக்கிடையே மாற்றப்படுபவர்கள் (ICT), ஒப்பந்த சேவை வழங்குனர்கள் (CSS), தற்சார்புடைய செயல்முறை வல்லுனர்கள், மற்றும் நிறுவுபவர்கள் மற்றும் சேவை வழங்குபவர்களுக்கு சந்தை அணுகலை சேவைத்துறைகளின் ஒரு வரிசைக்கு இந்தியா வழங்கியிருக்கிறது. வணிக முறை வருகையாளர்கள் (BV), பெரு நிறுவனங்களுக்கிடையே மாற்றப்படுபவர்கள், ஒப்பந்த சேவை வழங்குனர்கள், தற்சார்புடைய செயல் அலுவலர்கள், மற்றும் நிறுவுபவர்கள் மற்றும் சேவை வழங்குபவர்களுக்கு சந்தை அணுகலை பல்வேறு சேவைத்துறைகளுக்கு ஆஸ்திரேலியா வழங்கியிருக்கிறது. இது தவிர, வாழ்க்கத்துணைகள் மற்றும் அண்டியிருப்போரின் நுழைவு, தங்கல் மற்றும் வேலை செய்யும் உரிமைகளைக் குறித்து, இரு தரப்புகளிலும் வாக்குறுதிகள் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கின்றன.

**கேள்வி 13: இந்தியாவுக்கு பலவித வகை சேவை வழங்குபவர்களுக்கு ஆஸ்திரேலியாவினால் அனுமதிக்கப்படும் அதிகபட்ச தங்கல் காலம் எவ்வளவு?**

**பதில்:**

- வணிகமுறை வருகையாளர்கள் (BV) – 3-லிருந்து 12 மாதங்கள் வரை;
- நிறுவுபவர்கள் மற்றும் சேவை வழங்குனர்கள் – 3 மாதங்கள்;
- பெரு நிறுவனங்களுக்கிடையே மாற்றப்படுபவர்கள் (ICT) –4 வருடங்கள், மேற்கொண்டு தங்கும் சாத்தியத்துடன்;
- தனிச்சார்புடைய தொழில் அலுவலர்கள் –4 வருடங்கள்;
- ஒப்பந்த சேவை வழங்குனர்கள், (CSS) –4 வருடங்கள், மேற்கொண்டு தங்கும் சாத்தியத்துடன்.

**கேள்வி 14: தகவல் தொழில்நுட்பம் /தகவல் தொழில் நுட்பம் சார்ந்த சேவைகளுக்கு ஆஸ்திரேலியாவினால் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் இந்திய சேவை வழங்குனர்களுக்கு பயன் தருவதாக உள்ளதா?**

**பதில்:** ஆம், கணினி சார்ந்த சேவைகளுக்கு கொடுக்கப்பட்ட அதன் வாக்குறுதிகளுக்கு ஆஸ்திரேலியாவினால் எந்த வரம்புகளும் போடப்படவில்லை. இந்திய தகவல் தொழில்நுட்பம்.˙. தகவல் தொழில் நுட்பம் சார்ந்த சேவைகளுக்கு இந்த வாக்குறுதிகள் பயன் அளிக்கும்.

**கேள்வி 15: 'நிதித்துறை சேவைகளுக்கு' ஆஸ்திரேலியாவின் துறைக்கான வாக்குறுதி என்ன?**

**பதில்:** நிதித்துறை சேவைகளுக்குக் கீழ் உள்ள காப்பீடு மற்றும் காப்பீடு சார்ந்த சேவைகள், வங்கித்துறை மற்றும் மற்ற நிதித்துறை சேவைகள் போன்ற ஏறக்குறைய அனைத்து துணைத் துறைகளிலும் ஆஸ்திரேலியா வாக்குறுதி அளித்திருக்கிறது.

**கேள்வி 16: தொழில்முறை தகுதிகளை ஒருவருக்கொருவர் ஏற்றுக்கொள்வதற்கான வழிவகை ஏதேனும் உள்ளதா?**

**பதில்:** ஆம், இரு தரப்பினரும் தொழில்முறை சேவைகளில் ஒரு இணைப்பை ஒப்புக் கொண்டிருக்கின்றனர். அதன்படி தொழில்முறை சேவைகள் மற்றும் உரிமம் பெறப்பட்ட/ஒழுங்குபடுத்தப்பட்ட தொழில்களை ஒருவருக்கொருவர் ஏற்றுக் கொள்வதைத் தொடர விளக்கமான வழிவகைகள் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளன. இந்தியா மற்றும் ஆஸ்திரேலியாவின் தொழில்முறை அமைப்புகளுக்கு இடையே உள்ள செவிலியர் தொழில், கட்டிடத் துறை மற்றும் வேறு தொழில்முறை சேவைகளுக்கான ஆசுயுள மீது பேச்சுவார்த்தையைத் துவங்க இது வழி வகுக்கும். இது ஒருவரின் நிலப்பகுதியிலிருந்து மற்றொருவரின் பகுதிக்கு தொழில்முறை வல்லுனர்கள் சென்று புழங்க வசதி செய்யும்.

**கேள்வி 17: இந்தியாவிலிருந்து வரும் இளம் தொழில்முறை வல்லுனர்களுக்கு வேலை மற்றும் விடுமுறை விசா வசதியை ஆஸ்திரேலியா அளித்திருக்கிறதா?**

**பதில்:** பலமுறை நுழைவுடன் கூடியவேலை மற்றும் விடுமுறை விசா 18-30 வயது வரம்பில் இருக்கும் 1000 இளம் இந்தியர்களுக்கு ஆஸ்திரேலியாவினால் ஒரு வருடத்துக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதில் அவர்கள் படிப்பு அல்லது பயிற்சியை நான்கு மாதங்கள் வரை (17 வாரங்கள்) மேற்கொள்ளலாம் அல்லது ஆஸ்திரேலியாவில் அவர்களது முழு தங்கல் காலத்துக்கும் சம்பளம் உள்ள அல்லது சம்பளம் இல்லாத வேலையை பொதுவாக ஏதாவது ஒரு முதலாளியிடம் ஆறு (6) மாதங்களுக்கு மேற்கொள்ளலாம்.

**கேள்வி 18: இந்தியாவிலிருந்து வரும் சமையல் கலைஞர்களுக்கும் யோகா பயிற்றுனர்களுக்கும் ஆஸ்திரேலியா ஏதாவது ஒதுக்கீடு வழங்கியிருக்கிறதா?**

**பதில்:** ஒப்பந்த சேவை வழங்குனர்கள் போல உள்நுழையும் தகுதிபெற்ற, தொழில்முறை இந்திய பாரம்பரிய சமையல் கலைஞர்கள் மற்றும் யோகா பயிற்றுனர்களுக்கு ஆஸ்திரேலியா வருடத்துக்கு 1800 எண்ணிக்கை ஒதுக்கீடு செய்திருக்கிறது. இதன் மூலம் மேற்கொண்டு தங்குவதற்கான வாய்ப்போடு 4 வருடங்கள் வரை தற்காலிக நுழைவு மற்றும் தங்கல் அனுமதிக்கப் பட்டிருக்கிறது. சமையல் கலைஞர்கள் மற்றும் யோகா பயிற்றுனர்களுக்கான ஒதுக்கீடு இந்த தொழில்முறை வல்லுனர்களுக்கு, பொருந்தும் தகுதி விதிமுறைகளுக்கு உட்பட்டு ஆஸ்திரேலியாவில் புழங்க வசதி செய்கிறது.

**கேள்வி 19: இந்திய மாணவர்களுக்கு 2-4 வருடங்கள் கல்விக்குப் பிறகான வேலை விசா உள்ளதா?**

**பதில்:** ஆம். ஆஸ்திரேலியாவிலேயே வாழ்ந்து, படித்து அவர்களின் படிப்பை முடித்தபிறகு தற்காலிகமாக வேலை செய்ய பின்வரும் வாய்ப்புகளை முன்னாள் மாணவர்களுக்கு ஆஸ்திரேலியா அளிக்க ஒப்புக்கொண்டுள்ளது.

a) டிப்ளமா அல்லது வர்த்தகக் கல்வித் தகுதிகளை முடித்த பிறகு, 18 மாதங்கள் வரை தங்குதல்

b) இளநிலை கல்வித்தகுதியை (ஆனர்ஸ் படிப்பு உள்ளிட்டு) முடித்த பிறகு 2 வருடங்கள் வரை தங்குதல்

c) ஆராய்ச்சி மூலம் முதுநிலைக் கல்வியும் மற்றும் பாடநெறி மூலம் முதுநிலைக்கல்வியும் முடித்த பிறகு, 3 வருடங்கள் வரை தங்குதல்.

d) முனைவர் பட்டத்தை முடித்த பிறகு, 4 வருடங்கள் வரை தங்குதல்.

தகுதியுள்ள இந்திய இளங்கலை பட்டதாரிகள், முதுநிலை பட்டதாரிகள் மற்றும் STEM சிறப்புத் தகுதியாளர்கள் போன்றவர்களுக்கு ஆஸ்திரேலியாவில் பணி புரிய கல்விக்குப் பிறகான வேலை விசா நீட்டிக்கப்பட்ட விருப்பத் தேர்வை அளிக்கிறது.

## வர்த்தகத் தீர்வுகள்

**கேள்வி 20: ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி எழுச்சியிலிருந்து இந்திய உள்நாட்டு தொழில்துறையைக் காப்பாற்ற ஏதாவது பாதுகாப்பு வழிமுறைகள் உள்ளனவா?**

**பதில்:** ஆம்.

- இந்த ஒப்பந்தத்தில் ஒரு இரு தரப்பு பாதுகாப்பு வழிமுறை கட்டமைக்கப்பட்டிருக்கிறது. தீர்வை நீக்கல் அல்லது குறைத்தல் காரணமாக ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதியில் எழுச்சி ஏற்பட்டால் அவ்வாறு ஏற்படும் சரக்குகளின் மேல் தீர்வை விகிதத்தை ஆகுமே அளவுக்கு இந்தியா அதிகரித்துக் கொள்ளலாம்.இந்த வழிமுறை நிலைமாற்ற காலம் அதாவது கட்டண முழு விலக்கு அல்லது கட்டணக் குறைப்பின் முடிவு தேதியிலிருந்து பதினான்கு ஆண்டு காலத்துக்கு உபயோகத்தில் இருக்கும். உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட தயாரிப்புப் பொருளுக்கு கட்டண முழு விலக்குக் காலம் 10 வருடங்கள் என்றால், பிறகு அந்தப்பொருளுக்கான இருதரப்பு பாதுகாப்பு ஒப்பந்தத்தின் நடைமுறை கொண்டுவரப்பட்ட நுழைவு தேதியிலிருந்து 24 வருடங்கள் வரை விதிக்கப்படலாம்.
- ஆஸ்திரேலியா இதுவரை கையெழுத்திடப்பட்ட அதன் எந்த FTAs-களுக்கும் 8 வருடங்களுக்கு மேல் நிலைமாற்றக் காலத்தை தரவில்லை. இருதரப்பு பாதுகாப்பு வழிமுறை பிரயோகத்துக்கு 14 வருடங்கள் நிலைமாற்றக் காலத்துக்கு ஆஸ்திரேலியா ஒப்புக் கொண்டது இதுவே முதல் முறை.

**கேள்வி 21: இந்திய உள்நாட்டுத் தொழில்துறைக்கு உடனடி பாதுகாப்பு வழங்க ஏதாவது நடைமுறை இருக்கிறதா?**

**பதில்:** ஆம்.

- இறக்குமதியில் எழுச்சி ஏற்படுவதின் காரணமாக உள்நாட்டு தொழில்துறைக்கு சரி செய்ய முடியாத சேதம் ஏற்படும் நெருக்கடியான சூழ்நிலைகளில், உள்நாட்டு தொழில்துறைக்கு உடனடி நிவாரணம் அளிக்க

வேண்டி ,விவரமான புலானய்வு முடிவடையா நிலையில், தற்காலிக இரு தரப்பு பாதுகாப்பு நடவடிக்கையை விதிக்க இந்தியாவுக்கு உரிமை உண்டு.

**கேள்வி 22: இந்தியா ஒரு இருதரப்பு பாதுகாப்பு நடவடிக்கையை விதித்தால், ஆஸ்திரேலியா உடனடியாக அதற்கு எதிர் நடவடிக்கையை எடுக்க முடியுமா?**

**பதில்:** இல்லை.

- இந்தியாவின் ஒரு இருதரப்பு பாதுகாப்பு நடவடிக்கை விதிப்புக்கு எதிராக ஆஸ்திரேலியா உடனடி எதிர்நடவடிக்கை எடுக்க முடியாது, குறைந்த பட்சம் 2 வருடங்களாவது அவசியம் காத்திருக்க வேண்டும்.

## தோற்றுவாய் விதிகள்

**கேள்வி 23: தோற்றுவாய் விதிகள் யாவை?**

**பதில்:** ஒரு நாட்டிலிருந்து ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்யப்பட்ட ஒரு தயாரிப்புப் பொருளின் நாட்டு சார்பை தோற்றுவாய் விதிகள் நிர்ணயிக்கின்றன.

**கேள்வி 24: தோற்றுவாய் விதிகள் எந்த நோக்கத்துக்கு பயன்படுகின்றன?**

**பதில்:** FTA கூட்டாளி நாட்டின் பொருட்கள் மட்டும் முன்னுரிமை கட்டண முறை வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் ஒரு மிக முக்கியமான நோக்கத்துக்கு தோற்றுவாய் விதிகள் பயன்படுகின்றன.

**கேள்வி 25: IndAus ECTA-படி "தோற்றுவிக்கப்பட்டப் பொருட்கள்" என்பதன் சொல்விளக்கம் என்ன?**

**பதில்:** ஒரு பொருள்குவ்யு கூட்டாளி நாட்டின் எல்லைக்குள் இருந்து முழுவதுமாக பெறப்பட்டால் அது ஒரு தரப்பிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட பொருள் என்று கருதப்படும். மேலும், அந்தப் பொருள் முழுவதுமாக தயாரிக்கப்படாவிட்டால், பிறகு அது கீழ்வரும் நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும்:

i. அந்தப் பொருளுக்கு, தகுதிபெறும் மதிப்பு உள்ளடக்கம் (QVC) பில்ட்-அப் விதிமுறையின்படி FOB மதிப்பில் 35 சதவிகிதத்திற்குக் குறையாமல் அல்லது பில்ட்-டவுன் விதிமுறையின்படிகுழுடீமதிப்பில்45மூஇருக்க வேண்டும்.

ii. தயாரிப்பில் பயன்படுத்தப்பட்ட தோற்றுவிக்கப்படாத பொருட்கள் ஆறு இலக்க நிலையில், அதாவது CTSH, ஒரு கட்டண வகையரைபடுத்தப் பட்டிருக்க வேண்டும்.

கற்கள் மற்றும் நகைகள் துறைக்கு,தகுதிபெறும் மதிப்பு உள்ளடக்க அளவுகோல் குறைவான அளவில் அதாவது 1.5% என்று வைக்கப்பட்டிருக்கிறது. இது ஆஸ்திரேலியாவுக்கு நம் நகைகள் ஏற்றுமதியை ஊக்குவிக்கும்.

**கேள்வி 26: IndAus ECTA-வின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட/ தோற்றுவிக்கப்படாத பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பொருட்களுக்கான தோற்றுவாய் விதிகள் என்ன?**

**பதில்:** மூன்றாம் தரப்பிலிருந்து இறக்குமதி செய்யப்பட பொருட்களை வைத்து தயாரிக்கப்பட்ட ஒரு பொருள், தயாரிப்புப் பொருளுக்கு உரிய விதிகளுக்கு உட்பட்டிருந்தால் மட்டுமே IndAus ECTA-இன் கீழ் முன்னுரிமைக் கட்டணத்துக்குத் (PSR) தகுதிபெறும். அந்தப் பொருளுக்கு PSR இல்லையென்றால், அது முந்தைய கேள்வியின் பதிலில் குறிப்பிடப் பட்டுள்ள இரட்டை நிபந்தனைகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும். அதாவது, பில்ட்-அப் விதிமுறை பயன்படுத்தப்பட்டிருந்தால் CTSH +35% QVCஅல்லது பில்ட்-டவுன் விதிமுறை பயன்படுத்தப் பட்டிருந்தால் CTSH +45% QVC.

**கேள்வி 27: தயாரிப்புப் பொருளுக்கு உரிய விதிகள் யாவை?**

**பதில்:** தயாரிப்புப் பொருளுக்கு உரிய விதிகள் என்பவை 6 இலக்க நிலையில் உள்ள ஒரு குறிப்பிட்ட துணைத் தலைப்புக்குப் பொருந்தும் விதிகள் ஆகும். PSR இல்லாத பட்டியலிடப் படாத HS குறியீடுகள் விதி 4.3 (முழுவதும் தயாரிக்கப்படாத அல்லது பெறப்படாத பொருட்கள் - தோற்றுவாய் விதிகள்) பத்தி 1-இல் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள பொது விதிக்குக் கட்டுப்பட்டவை.

**கேள்வி 28: IndAus ECTA-இன் கீழ் QVC-யை கணக்கிடுவதற்கான வழிமுறைகள் யாவை?**

**பதில்:** QVC-யைக் கணக்கிட இரு வழிமுறைகள் உள்ளன, அதாவது பில்ட்-அப் (நேரடி வழிமுறை) அல்லது பில்ட்-டவுன் (மறைமுக வழிமுறை).

**கேள்வி 29: ஆஸ்திரேலியா அல்லாத ஒரு நாட்டிலிருந்து (அதாவது ஒரு மூன்றாவது நாடு) ஆஸ்திரேலியா வழியாக இந்திய சந்தைக்கு வரும் பொருட்கள் IndAus ECTA-இன் கீழ் உள்ள கட்டண சலுகைகளின் பயனை அடைய முடியுமா?**

**பதில்:** முடியாது.

- இந்திய-ஆஸ்திரேலிய ECTA கணிசமான செயலாக்கத்துக்குத் தேவையான கடுமையான தோற்றுவாய் விதிகள் மூலம் அத்தகையப் பொருட்களை அனுமதிக்காது. இந்தியாவின் வலுயுறுத்தலுக்கு இணங்கி, பல விவசாயப் பொருட்கள் முழுவதும் பெறப்பட்ட அளவுகோல்கள் கொண்டிருக்கின்றன. தவிர,எங்கெல்லாம் வேறு விதிகள் பயன்படுத்தப்படுகின்றனவோ, அங்கெல்லாம் அவற்றில் துணைத் தலைப்பின் நிலையில் கட்டண வகைப்பாடுகள் மற்றும் குறைந்தது 35% பில்ட்-அப் விதிமுறை பயன்பாடு (அல்லது 45 % பில்ட்-டவுன் விதிமுறை பயன்பாடு) மதிப்புக் கூடுதல் ஃப்ரீ ஆன் போர்ட் (FOB) ஏற்றுமதி மதிப்பு அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருக்கிறது.
- மேலும், இந்திய எஃகு தொழில்துறையைக் காப்பாற்றும் பொருட்டு, “உருக்கி ஊற்றல்” என்ற நிபந்தனை தயாரிப்புப் பொருளுக்கு உரிய விதியாக எஃகுப் பொருட்களுக்கு (குறிப்பாக ITC(HS) 7206 to 7229) சேர்க்கப்பட்டிருக்கிறது. முன்னுரிமை கட்டணத்தில் இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்பட தகுதி பெற வேண்டும் என்றால் மூல நிலை எஃகு திரவ நிலைக்கு வருமாறு உருக்கப்பட்டு அதன் முதல் திட நிலையில் ஆஸ்திரேலியாவில் ஊற்றப்பட வேண்டும் என்பது இதன் பொருள்.
- இது தவிர, ஆவணப்படுத்துதல் பொறுப்பை இந்திய இறக்குமதியாளர்கள் மேலும் ஆஸ்திரேலியாவின் வழங்கும் அதிகாரிகளால் கொடுக்கப்படும் தோற்றுவாய் சான்றிதழ் (Certificate of Origin) மேலும் சுமத்தும் இந்தியாவின் CAROTAR (Customs Administration under Trade Agreements Rules 2020)-ஐப் பார்க்கும்போது, இந்தக் கடினமான விதிகளைத் தவிர்ப்பதற்கான வாய்ப்பு மிகக் குறைவு. இந்த விதிமுறைகளின் கீழ் கணிசமான செயலாக்கத்தை உறுதிப் படுத்தும். இது தவிர, சரிபார்ப்பு செயல்முறை வலுவாக உள்ளது. ஏற்றுமதியாளர் குறைந்தபட்ச அளவு தேவையான தகவல்களையும் சரியான ஆவணங்களையும் வைத்திருக்க வேண்டும்.
- முடிவாக, IndAusECTA இந்திய சந்தைக்குள் மூன்றாம் நாட்டுப் பொருள் உள்ளே வந்து சலுகைக் கட்டணங்களை அனுபவிக்காமல் இருக்குமாறு தேவையான பாதுகாப்புகளை கட்டமைத்திருக்கிறது.

**கேள்வி 30: தோற்றுவாய் சான்றிதழில் என்ன இருக்கும்?**

**பதில்:** தோற்றுவாய் சான்றிதழின் உறை ஆங்கில மொழியில் இருக்க வேண்டும். அதன் வடிவம் தோற்றுவாய் விதிகள் அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஏற்றுமதியாளர்கள் அவர்களது தோற்றுவாய்ச் சான்றிதழில் பொருட்களின் விவரம், HS குறியீடு (ஆறு இலக்க நிலை) போன்ற மற்ற விவரங்களோடு பயன்படுத்தப்பட்ட தோற்றுவாய் விதிமுறைகளைக் குறிப்பிட வேண்டும் மேலும், இந்தத் தோற்றுவாய்ச் சான்றிதழ் இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு ஏற்றுமதி ஆய்வு மன்றத்தால் வழங்கப்படும்.

**கேள்வி 31: சான்றளிப்பு செயல்முறையை திறன்பட செயல்படுத்தவும் தவறான பயன்பாட்டு சாத்தியத்திலிருந்து காக்கவும்: IndAusECTA -வில் கீழ் தோற்றுவாய் விதிகளின் என்ன தனி வகைமுறைகள் உள்ளன?**

**பதில்:** : IndAusECTA தவறான பயன்பாட்டு சாத்தியத்திலிருந்து காக்க பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டுள்ளது.

i. முன்னுரிமைக் கட்டண பயனை மறுப்பதற்கான காரணங்கள் வகுக்கப்பட்டு ஒப்பந்தத்தில் உரைக்கப்பட்டிருக்கின்றன.
ii. முன்னுரிமையோடு நடத்தும் முறையைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பது ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.
iii. முன்னுரிமையோடு நடத்தும் முறைக்கான உரிமைக் கோரிக்கையின் ஐயம் ஏற்படும் நேரத்தில் நேர வரையறைக்குட்பட்ட சரிபார்த்தல் வழிமுறையும் அமைக்கப்பட்டிருக்கிறது.
iv. செலவினக் கூறுகள் மற்றும் லாபம் /தொடர்புள்ள கூறுகள் தோற்றுவாய் சான்றிதழுக்கு விண்ணப்பம் செய்யும் நேரத்திலேயே கிடைக்குமாறு செய்யப்படும் மேலும் சரிபார்ப்பு சமயத்தில் அவற்றை வேண்ட வழி செய்யும் வகையில் தனிவகை முறைகள் ஏற்படுத்தப்படும்.

**கேள்வி 32: தோற்றுவாய் விதிகளின் தனிவகை விதிகளின் மூலம் எவ்வாறு ஏற்றுமதியாளர்கள் பலன்களை அதிகப்படுத்திக் கொள்ளலாம்?**

**பதில்:** ஒரு வழக்கமான ஏற்றுமதியாளர் கீழே வரையறுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் அதிகபட்ச பலன்களைப் பெறலாம்.

i. ஒரு ஏற்றுமதித் தயாரிப்பு பொருளை உற்பத்தி செய்ய பயன்படுத்தப்படும் மூலப் பொருட்கள், கூறுகள், உள்ளீடுகள் போன்றவற்றை அடையாளம் கண்டு கொள்ளுதல்.

ii. தன வசதிக்கு ஏற்ப, பில்ட்-அப் அல்லது பில்ட்-டவுன் முறையை உபயோகித்து தகுதிபெறும் மதிப்பு உள்ளடக்கத்தைக் கணக்கிடல்.

iii. தோற்றுவாய் விதிகளில் (RoO) வகுத்துள்ளபடி, குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கான தேவைகள் நிறைவு பெறுகின்றனவா என்று நிர்ணயித்தல்.

iv. பெறப்பட்ட/பயன்படுத்தப்பட்ட உள்ளீடுகள் மற்றும் மூல பொருட்கள் பற்றிய செலவு/ விலை நிர்ணயம் குறித்த தகவல் மற்றும் வழங்கல் தொடரைக் கண்காணித்தல்.

## இணைக் கடிதங்கள்

**கேள்வி 33: இணைக் கடிதங்கள் என்றால் என்ன?**

**பதில்:**

- இணைக் கடிதம் என்பது இன்னொரு ஒப்பந்தத்தின் துணை ஆவணம். முக்கியமாக, இணைக் கடிதம் என்பது அடிப்படையான அல்லது முதன்மை ஒப்பந்தத்தின் ஒரு பகுதியல்லாத ஆவணம், இதன்மூலம் முதன்மை ஆவணத்தில் குறிப்பிடப்படாத பிரச்சினைகளின் மேல் ஒரு ஒப்பந்தத்தை அடைய அல்லது அவர்களுக்குத் தேவைப்படும் விளக்கங்களை அடைய, அந்த ஆவணத்தின் சில அல்லது அனைத்து தரப்புகளும் பயன்படுத்துவது,
- “ஒப்பந்தத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக உள்ளது” என்று இணைக் கடிதம் குறிப்பிட்டிருந்தால் மட்டுமே ஒப்பந்தத்துக்குக் கீழ் உள்ள இணைக் கடிதங்கள் சட்டப்பூர்வமாகப் பிணைக்கும் ஆவணங்களாக ஆகின்றன.

**கேள்வி 34: இந்த ஒப்பந்தத்தின் கீழ் கையோப்பமிடப்பட்டுள்ள இணைக் கடிதங்கள் எவை?**

**பதில்:**

1. கீழ்க்கண்டவற்றை அளிக்கும் விசாக்களுக்கான இணைக் கடிதம்

a) 18 மாதங்கள் - 4 வருடங்களுக்கான ஒரு “படிப்புக்குப் பிறகான” வேலை விசா. இது அங்கு படிக்கும் இந்திய மாணவர்களுக்கு பயன் தரும். தற்போது, 100,000-க்கும் அதிகமான இந்திய மாணவர்கள் அங்கு படிக்கிறார்கள். STEM பட்டதாரிகளுக்கு இது 3 வருட படிப்புக்குப் பிறகான வேலை விசாவை அனுமதிக்கும்

b) இளைஞர்களுக்கு ஒரு “வேலை மற்றும் விடுமுறை விசா”. இது 18-30 வயதுள்ள இளைஞர்களுக்கு 12 மாதங்களில் 6 மாதங்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது.

2. “வைன்”-க்கான இணைக் கடிதம்.இது ஒழுங்குமுறை சார்ந்த விஷயங்களில் கூட்டுறவு, சிறந்த நடைமுறைகளை பகிர்ந்துகொள்ளல், தொழில்நுட்ப உதவி மற்றும் திறன் மேம்படுத்தல் போன்றவற்றின் மூலம் வைன் வர்த்தகத்தை எளிதாக்குதல்.

3. “ஆர்கானிக்” மீதான இணைக்கடிதம். இதன் மூலம் ஆர்கானிக் பொருட்களில் பரஸ்பர புரிந்துணர்வு ஒப்பந்தம் (ஆசுயு) ஏற்படுவதை எளிதாக்குகிறது.

4. இரட்டை வரிவிதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தம்(னுவுயுயு-வின் கீழ் வரிவிதிப்பு விஷயங்களை தீர்ப்பதற்கான இணைக் கடிதம். இது நம் தகவல் தொழில்நுட்ப ஏற்றுமதிகளைப் பாதிக்கும்.

5. விஸ்கி-க்கான இணைக் கடிதம் இது விஸ்கி மற்றும் பிற மது பானங்களுக்கான சந்தை அணுகல் சார்ந்த பிரச்சினைகளை பரிசீலனை செய்யும்.

6. வைன் குறித்து மிகத் தனிச் சலுகைகளுக்கு உரிய நாடு என்பதற்கான இணைக் கடிதம். இது வைன் இறக்குமதி செய்வதற்கு இந்தியா வேறு ஏதாவது நாடுகளுக்கு கொடுக்கும் பயன்களை ஆஸ்திரேலியாவுக்கு அளிக்கும்.

## பொது

**கேள்வி 35: இந்த ஒப்பந்தத்தில் பொருளாதார கூட்டுறவு குறித்து ஏதேனும் வழிவகை இருக்கிறதா?**

**பதில்:** ஆம், உண்டு.

- பொது வழிவகை மற்றும் விதிவிலக்குகள் அத்தியாயத்தில் 11.7 (பொருளாதாரக் கூட்டுறவு) என்ற சட்டவிதி உள்ளது. அதன்படி உரிய தரப்புகள் இந்த ஒப்பந்தத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்து அதன் பயன்களை அதிகப்படுத்துவதில் கூட்டுறவின் முக்கியத்துவத்தை ஒப்புக்கொள்கிறார்கள். மேலும் சட்டவிதி 11.2 (குறிக்கோள்கள்) பொருளாதாரக் கூட்டுறவுக்கு புதிய தளங்களை ஆராய அனுமதிக்கிறது.

**கேள்வி 36: தரப்புகளின் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகளை பதிப்பித்தல் குறித்து ஏதாவது வழிவகை இருக்கிறதா?**

**பதில்:** வெளிப்படைத் தன்மை அத்தியாயம் சட்டவிதி 10.2(பதிப்பித்தல்)-இன் கீழ், ஒவ்வொரு தரப்பும் இந்த ஒப்பந்தத்தில் இருக்கும் எந்த விஷயத்தைக் குறித்தும் உள்ள அதன் சட்டங்கள், ஒழுங்கு முறைகள், நடைமுறைகள், மற்றும் பொதுப் பயன்பாட்டுக்கான நிர்வாக உத்தரவுகள் போன்றவை உடனடியாக பதிப்பிக்கப்பட்டு அதிகாரப் பூர்வமான வலைதளம் உள்ளிட்ட பொதுத் தளத்தில் மற்ற தரப்பில் ஆர்வம் உள்ள நபர்கள் அவற்றை அறிமுகம் செய்து கொள்ளும் முறையில் அவர்களுக்குக் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

**கேள்வி 37: ஒப்பந்தத்தின் கீழ் சர்ச்சைத் தீர்வு வழிமுறைக்கான வழிவகை உள்ளதா?**

**பதில்:**

- இந்த ஒப்பந்தத்தின் வழிவகைகள் காரணமாக எழும் சர்ச்சைகளுக்கு மாநிலத்திற்கு மாநிலம் தீர்வை இந்த ஒப்பந்தம் வழங்குகிறது. தரப்புகள் தங்கள் வேற்றுமைகளை தீர்த்துக் கொள்ள பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்றும் பேச்சுவார்த்தைகள் தோல்வியுற்றால், ஒரு குழு அமைத்து சர்ச்சையை தீர்த்துக் கொள்ளலாம் என்றும் இந்த வழிமுறை வழி வகுக்கிறது. எந்த நேரத்திலும், தரப்புகள் பரஸ்பரம் ஒப்புக்கொள்ளப்பட்ட தீர்வை அடையலாம் அல்லது பதவிச் செல்வாக்கு, மத்தியஸ்தம் அல்லது சமரசம் போன்ற மாற்றுத் தீர்வு வழிமுறைகளைத் தேர்ந்தெடுக்கலாம்
- அந்தக் குழு மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். சர்ச்சையில் உள்ள ஒவ்வொரு தரப்பும் ஒரு உறுப்பினரை நியமிக்கலாம். குழுவின் தலைமைப் பொறுப்பு உள்ள மூன்றாவது உறுப்பினர் பரஸ்பர ஒப்பந்தத்தின் பேரில் நியமிக்கப் படலாம். குழுவின் விசாரணைகள் மறைவு அமர்வாக நடத்தப்படும் மேலும் அவை ரகசியமாக இருக்கும்.

**கேள்வி 38: IndAusECTA எப்போது நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்?**

**பதில்:** தத்தம் உள்நாட்டு ஒப்புதல் செயல்முறைகள் முடிந்து விட்டன என்று இரு தரப்புகளும் ஒருவருக்கொருவர் அறிவித்துக்கொண்ட 30 நாட்களுக்குப் பிறகு இந்த ஒப்பந்தம் பயன்பாட்டுக்கு வரும்.

**கேள்வி 39: ஆஸ்திரேலியாவுடனான வர்த்தக ஒப்பந்தத்துக்கு ஏதாவது மூலோபாய காரணங்கள் உண்டா?**

**பதில்:** ஆஸ்திரேலியாவுடனான ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்வது பொருளாதாரப் பார்வையிலிருந்தும் கீழ்க்கண்ட மூலோபாய காரணங்களாலும் முக்கியத்துவம் பெறுகிறது:

a) ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பானுடன் இந்தியா ஒரு முத்தரப்பு வழங்குதல் தொடர் விரிவாற்றல் முனைப்பில் (Supply Chain Resilience Initiative (SCRI)) நுழைந்திருக்கிறது. இதன் மூலம் இந்திய பசி.ஃ.பிக் பிராந்தியத்தில் வழங்குதல் தொடர் விரிவாற்றலை மேம்படுத்தவும் நம்பத்தகுந்த வழங்குதல் மூலங்களை மேம்படுத்தவும் மற்றும் வழங்குதல் மூலங்களை பல்வகைப்படுத்துதல், உள்நாட்டு உற்பத்தியை ஊக்கப்படுத்துதல் போன்றவை உள்ளிட்ட , முதலீடுகளைக் கவர்ந்து இழுக்கவும் முயலும்.

b) இந்தப் பிராந்தியத்தில் வெளிநாட்டு நேரடி முதலீட்டை (FDI)கவரவும், பங்கேற்பாளரிடையேபரஸ்பர நிறைவு உண்டாக்கும் உறவை வலுப்படுத்தவும்இலக்கு கொள்ளும். கூட்டுறவை மேலும் மேம்படுத்தவும் பொதுவான நலன்கள் குறித்தான பல பிரச்சினைகளில் கூட்டமைப்பை வளர்த்தவும் யுஎஸ், ஆஸ்திரேலியா, இந்தியா மற்றும் ஜப்பான் அடங்கிய ஒரு நாற்தரப்பை இந்தியா சமீபத்தில் உருவாக்கியிருக்கிறது.

**கேள்வி 40: ஆஸ்திரேலியாவிலிருந்து வரும் பொருட்கள் ஏற்றுமதியைத் தவிர்ப்பதிலிருந்து இந்திய உள்நாட்டு தொழில்துறையின் நலன்களைப் பாதுகாக்க இந்த ஒப்பந்தத்தின் கீழ் என்ன வழிமுறைகள் உள்ளன?**

**பதில்:**

- இந்த ஒப்பந்தத்தின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள கண்டிப்பான தோற்றுவாய் விதிகள், எந்த தவிர்ப்பு, மறை வெளிப்பாடு அல்லது இந்த ஒப்பந்தத்தில் இடம் பெறாத வேறு நாட்டிலிருந்து பொருட்களை திசை திருப்புதல் போன்றவற்றிலிருந்து இதன்மூலம் பாதுகாக்கும்:
  a) இந்தத் தரப்புகளின் பிரதேசத்தில் கணிசமான செயலாக்கத்துக்கான தேவை;
  b) 807 தொடர்களுக்கு தயாரிப்புப்பொருளுக்கு உரிய தோற்றுவாய் விதிகள் (PSRs);
  c) இது தவிர, இந்தியாவால் வழங்கப்படும் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கை கொண்ட விவசாயப் பொருட்களுக்கு, அந்தப் பொருள் ஆஸ்திரேலியாவில் வளர்க்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது உள்ளூர் உள்ளீடுகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும்;
  d) மேலும், முன்னுரிமைக் கட்டண பயனை மறுப்பதற்கான அடிப்படைகளை வழங்குதல், முன்னுரிமையோடு நடத்தும்

முறையைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பது, நேர வரையறைக்குட்பட்ட சரிபார்த்தல் வழிமுறை, செலவினக் கூறுகள் மற்றும் லாபம்/தொடர்புள்ள கூறுகள் போன்ற துணைத் தகவல்களை சரிபார்ப்பு சமயத்திலேயே கிடைக்குமாறு வழி செய்யக் குறிப்பிடுதல்;

e) பொருள் குவுயு கூட்டாளியிடமிருந்துதான் வருகிறது என்பதை உறுதி செய்ய 35% (பில்ட்-அப் விதிமுறையின் கீழ்) மற்றும் 45% (பில்ட்-டவுன் விதிமுறையின் கீழ்) போன்ற இறுக்கமான மதிப்பு கூடுதல் விதிகள்;

f) எ்.கு பொருட்களுக்கு, இந்தியாவினால் பரிந்துரைக்கப்பட்ட “உருக்கி ஊற்றல்” என்ற நிபந்தனை ஒப்புக்கொள்ளப்பட்டது; மற்றும்

g) இந்தியாவின் CAROTAR விதிகள், 2020 படி, ஆவணப்படுத்துதல் தேவையை இறக்குமதியாளர் மேலும் ஏற்றுமதி செய்யும் நாட்டின் தோற்றுவாய் சான்றிதழ் வழங்கும் அதிகாரியிடமும் வைப்பது.

- ஆஸ்திரேலியாவிலிருந்து பொருட்கள் இறக்குமதியில் எதிர்பாராத எழுச்சிஇடமிருந்து பாதுகாக்க இருதரப்பு பாதுகாப்பு நடவடிக்கைகளை இந்த ஒப்பந்தம் வழங்குகிறது இந்த வகைமுறை கட்டண விலக்கு/குறைப்பு நடந்த கடைசி தேதியிலிருந்து 14 வருடங்கள் வரை வழக்கில் இருக்கும்.

******